பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 10 வியாழக்கிழமை 24.03.2022 கதிர் 139

### இது ரகசியம் அல்ல!

நமது தொப்புள் கொடி உறவுகளின் இரத்தபாசம் மெய்சிலிர்க்க வைக்கின்றது.

ஒரு காலத்தில் – எண்பதுகளிலும் தொணுறுகளின் ஆரம்பத்திலும் – ஈழத் தமிழர்களுக்காக தமிழகம் கிளர்ந்தெழுந்தமை நெக்குருக வைக்கும்

☞ 2

# ராஜபக்ஷ அரசை உடன் வீட்டுக்கு விரட்டுவோம்!

## நுகேகொடை போராட்டத்தில் அநுரகுமார எம்.பி. சூளுரை







தம்மால் முடியாது என்பதை இந்த ஆட்சியாளர்கள் அனைத்து விதத்திலும் நிரூபித்துவிட்டமையால், வீட்டுக்கு செல்லுங்கள் என நாட்டு மக்கள் வலியுறுத்த ஆரம்பித்துவிட்டனர். எனவே, இந்த ராஜபக்ஷ ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதற்கு நாமும் தயார்.

☞ 2

# வாக்குறுதிகளை மீறியமையால்தான் இம்மோச நிலைமை!

## சர்வகட்சிக் கூட்டத்தில் சம்பந்தன் இடித்துரைப்பு



கொழும்பு, மார்ச் 25

தொடர்ந்து வந்த அரசுகள் தாம் அவ்வப்போது வழங்கி வந்த வாக்குறுதிகளை மீறியமையால்தான் நாட்டுக்கு இந்த இழி நிலைமை.

– இவ்வாறு நேற்று கொழும்பில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டில் ஆணித்தரமாகத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி.

☞ 2

## பட்டினியில் வாடும் மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்குங்கள்!

### மாநாட்டில் சுமந்திரன் எம்.பி. கோரிக்கை

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான பொதுப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். பட்டினியில் வாடும் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில்

☞ 9

## ஈழ அகதிகளை முகாமில் பராமரிக்க நடவடிக்கை

(ந.லோகதயாளன்)

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு தமிழகத்தில் தஞ்சமடைந்த 16 பேரையும் மண்டபம் அகதி முகாமில் பராமரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கில் இருந்து 22ஆம் திகதி ஒரே நாளில் 16 பேர் தமிழ்நாட்டுக்குத் தப்பிச் சென்றனர்.

☞ 9

## மலையகத் தமிழர் அபிலாஷை ஆவணம் இந்தியத் தூதுவரிடம் நேற்று கையளிப்பு



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கான, இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர் சார்பான அபிலாஷை ஆவணக் கடிதத்தை, தமிழ் முற்போக்குக் கூட்டணி, நேற்று கூட்டணியின் தலைவர்

☞ 9

## தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டால் ஆசியாவின் சொர்க்கமாக மாறும் இலங்கை

### கோட்டாவிடம் சித்தர் நேரில் எடுத்துரைப்பு



தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இணக்கமான அரசியல் தீர்வைக் கண்டறிவது நிச்சயமாக எமது நாட்டை ஆசியாவின் சொர்க்கமாக மாற்றும்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேரில் எடுத்துரைத்தார் புளொட் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான

☞ 9

## புலம்பெயர் தமிழர்களுடன் கலந்துரையாட நான் தயார்

### அமெரிக்கத் தூதுக்குழுவிடம் கோட்டா உறுதி



அமெரிக்க அரச திணைக்களத்தின் அரசியல் விவகாரம் தொடர்பான உதவிச் செயலாளர் திருமதி விக்டோரியா நூலண்ட் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு

☞ 9

## ஜப்பான் தூதருடன் சம்பந்தன் பேச்சு



ஜப்பானின் இலங்கைக்கான புதிய தூதுவர் ஹிடக்கி மிசுகோஷி நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனையும், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனையும் சந்தித்துப் பேசினார். தூதுவரின் கொழும்பு உத்தியோக பூர்வ இல்லத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

## பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண ஒன்றிணைவோம்

### சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி அழைப்பு



தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

குறுகியகால மற்றும் நீண்டகால உத்திகளை முன்னெடுப்பதன் மூலம் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர வேண்டியதன்

☞ 9

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விடயம்.

ஆனால், ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவத்தை அடுத்து நிலைமை மாறியது.

இப்போது மீனவர்கள் சர்ச்சையால் மோசமான முரண்பாட்டு உறவு நிலை.

இந்தச் சமயத்தில்தான் ஈழத்திலிருந்து மீண்டும் அகதிகள் தமிழகத்தினுள் நுழையும் சூழல். முன்னர் அகதிகள் படையெடுப்புக்குக் காரணம் இருந்தது. உயிருக்கு அஞ்சியும், அடக்குமுறைகளைத் தாங்க முடியாமலும் தமிழர்கள் – லட்சத்துக்கும் அதிகமானோர் – தமிழகத்தில் தஞ்சம் புகுந்தனர். அதில் ஒரு நீதி, நியாயம், தேவை இருந்தது.

இப்போது போகின்றவர்கள் பொருளாதார அகதிகள். ஆனாலும் இவர்களையும் இரண்டு கரம் விரித்து ஆரத்தழுவி, கட்டியணைத்து வரவேற்கும் பண்பியல்பை தமிழகம் வெளிப்படுத்தியிருப்பது தமிழகத்தின் விருந்தோம்பலுக்கு முன்னுதாரணம்.

மீனவர் முரண்பாட்டால் முறுகல் நிலையில் இருக்கும் தமிழகம், அதற்காக ஈழத் தமிழ் அகதிகளை மாற்றான் கண்கொண்டு பார்க்கவில்லை. தொப்புள் கொடி உறவாகவே பார்க்கின்றது என்பது அவதானிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

அங்கு போய் நேற்றுமுன்தினம் இறங்கிய ஈழ அகதிகளுக்கு முதலில் விரைந்து உணவு கொண்டு போய் வழங்கி உபசரித்தவர்கள் இராமேஸ்வரம் மீனவர் சங்கத்தினர் என்பது கவனிக்கப்பட வேண்டியது.

இப்படி சட்ட விரோதமாக நாட்டுக்குள் வருபவர்களை கைது செய்து, நீதிமன்றத்தில் நிறுத்துவதுதான் அங்குள்ள சட்ட ஏற்பாடு. அதனை அந்த மாவட்ட ஆட்சியர் கவனித்தார். நேற்று முன்தினம் காலையில் முதலில் போய் இறங்கிய ஆறு பேர் முதலில் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். அவர்களைப் புழல் சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அடுத்த – எஞ்சிய – பத்துப் பேரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட இருக்கையில் நேற்று தமிழகத் தலைநகர் சென்னையில் இருந்து இராமேஸ்வரத்துக்கு உத்தரவு பறந்தது.

இப்படி வந்திறங்கும் ஈழ அதிகளைக் கைது செய்ய வேண்டாம், அவர்களை மண்டபம் அகதி முகாம்களில் வைத்து உபசரியுங்கள் என்று தமிழக அரசின் தலைமைச் செயலாளர் உத்தரவிட்டிருக்கின்றார் என அறிய வந்தது.

அது மாத்திரமல்ல, வெளிவராத இன்னொரு உத்தரவு குறித்தும் தகவல் கிட்டியுள்ளது.

இலங்கையில் இருந்து மேலும் பல அகதிகள் வரக் கூடும். குறைந்த பட்சம் இரண்டாயிரம் பேர் புதிதாக வந்தால் அவர்களைப் பராமரிக்கக் கூடிய வகையில் இடங்களைத் தயார் செய்து, முன்னேற்பாடுகள், ஒழுங்குகளைச் செய்யுங்கள் என்பதுதான் அந்த உத்தரவு.

இதை அறிந்த போது மனது நெகிழ்ந்தது. மீனவர்கள் சர்ச்சைகள், மோதல்களுக்கு மத்தியிலும் தொப்புள் கொடி உறவு மிகவும் பலப்பட்டு உறுதியாக இருக்கின்றது.

'தானாடா விட்டாலும் சதை ஆடும்' என்பார்கள். ஈழத் தமிழர்கள் பால் தமிழகத் தமிழர்கள் கொண்டிருக்கும் பரிவையும் உரிமையையும் எக்காரணம் கொண்டும் எவ்வேளையிலும் நாம் மறந்து விடக் கூடாது.

மீனவர் உரிமை பற்றிய குழப்பத்தை விட இந்த உறவு வலிமையானது. Blood is thicker than water.

* * *

நேற்று கொழும்பில் சர்வகட்சிக் கூட்டத்தில் பல சம்பவங்கள் நடந்தன. தமிழ் வாசகர்களுக்குக் கூறக்கூடிய இரண்டொரு விடயங்களை மட்டும் பகிர்கின்றேன்.

கட்சித் தலைவர்கள்தான் கூட்டத்தில் பேச ஏற்பாடு. அதன்படி தமிழர் தரப்பில் தமிழரசு சார்பில் இரா.சம்பந்தனும், புளொட் சார்பில் அதன் தலைவர் சித்தார்த்தனும் உரையாற்றினர்.

நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த போது ஜனாதிபதிக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஏதோ பேசினார்.

சற்று நேரத்தில் ஜனாதிபதியின் ஆலோசகரும், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலம் முழுவதும் ஜனாதிபதியின் செயலாளராகப் பணியாற்றியவருமான லலித் வீரதுங்க எழுந்து வந்து கூட்டத்தில் ஓர் ஓரத்தில் இருந்த சுமந்திரனின் காதுக்குள் கிசுகிசுத்தார்.

"நீங்களும் உரையாற்ற வேண்டும் என்று ஜனாதிபதி விரும்புகின்றார்." – என்றார் லலித் வீரதுங்க. தலையசைத்தார் சுமந்திரன்.

சற்று நேரத்தில் கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அடுத்து சுமந்திரன் பேசுவார் என்று அறிவித்தார்.

பொருளாதார நெருக்கடித் தீர்வு தொடர்பில் சில, பல முக்கிய விடயங்களை விவரித்தார் சுமந்திரன்.

இந்த விவகாரத்தைப் பற்றி ஆராய்வதற்காக தாமே முன்னின்று இரண்டு மாதங்களுக்கு முன்னர் எதிரணித் தலைவர்களைக் கூட்டி கலந்துரையாடல்களை நடத்தியமையை நினைவு கூர்ந்த சுமந்திரன், அந்தக் கலந்துரையாடல்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரதிகளை கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு இரண்டு கட்டங்களில் அணுகப்பட வேண்டும் என்றார் சுமந்திரன்.

ஒன்று – உடனடி நடவடிக்கைகள். நாட்டின் வெளிநாட்டுக் கடன் கடப்பாடுகளை – மீள் செலுத்துகைப் பொறுப்புக்களை – சாத்தியமான வழியில் தள்ளிப்போட்டு, அதற்கான நேர அட்டவணையை மீள ஒழுங்குபடுத்த வேண்டும். அந்தப் பணியை இதற்கென தகுதி பெற்ற சர்வதேச சட்டத்தரணிகள் மூலம் கையாளலாம். 2022இற்கு சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டம் பிழைத்துப் போய் விட்டது. அபிவிருத்தி மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு பெருந்தொகை நிதியை செலவிடும் முறைமையை நிறுத்தி, மக்களுக்கு உடனடி நிவாரணமளிக்கும் வரவு – செலவுத் திட்டம் ஒன்றை விசேடமாகத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும் – என்பவை உட்பட பல விடயங்களை உடனடி நடவடிக்கைகளுக்கான திட்டங்களாக சுமந்திரன் விவரித்தார்.

அடுத்தது – நீண்டகாலத் திட்டம். சம்பந்தன் ஐயாவும், சித்தார்த்தனும் இங்கு குறிப்பிட்டமை போல அதிகாரப் பகிர்வின்றி அபிவிருத்தி, பொருளாதார சுபீட்சம் எல்லாம் சாத்தியமற்றவை. அவை பற்றி இங்கு நான் விவரிக்கப்போவதில்லை. ஏனென்றால் அந்த விடயங்கள் குறித்துத்தான் நாளை மறுதினம் (வெள்ளியன்று) நாம் ஜனாதிபதியுடன் நேரில் பேசப் போகின்றோம். – என்று சுமந்திரன் அறிவித்தார். உடனே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பலமாகத் தலையை ஆட்டி அதை ஆமோதித்தார்.

ஆக, நாளை வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய – கூட்டமைப்பு சந்திப்புக்கு ஒரு சாதகமான சூழல் கட்டமைத்திருக்கின்றது. All set. Hope for the best. எல்லாம் சரியாகப் பொருந்தியிருக்கின்றன. நல்லது நடக்கும் என்று நம்புவோம்.

* * *

நீண்ட காலம் நடக்காமல், நாளை, நாளை என்று பிள்ளையார் கல்யாணம் போல தள்ளிப் போய்க் கொண்டிருந்த யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் வரும் இரண்டாம் திகதி நடைபெறும் என இப்போது அறிவிக்கப்பட்டு இருக்கின்றது.

இந்த கூட்டத்தில் தம் சார்பாகப் பிரசன்னமாகி இருப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி கீதநாத் காசிலிங்கம், இக்கூட்டம் நீண்ட காலம் கூட்டப்படாதமை குறித்து யாழ் அரச அதிபருக்கு எழுதிய கடிதத்தை அடுத்து, நீண்ட காலத்தின் பின்னர் இந்தக் கூட்டம் இப்போது கூட்டப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தின் எம்.பிக்கள் தவறாது இக்கூட்டத்தில் பங்குபற்றி இங்குள்ள நிலைமையை நேர் சீர் செய்யப் போராட வேண்டுமென எல்லோரும் எதிர்பார்க்கின்றனர்.

கூட்டத்திற்கு முதல் நாள் – ஏப்ரல் முதலாம் திகதி – முட்டாள்கள் தினம். அடுத்த நாள் – கூட்டம் நடைபெறும் தினம் அன்று – இனியும் நாங்கள் முட்டாள்கள் அல்லர் என்று காட்டிக் கொள்ள எல்லோரும் நல்ல வாய்ப்பு.

'குட்டக் குட்டக் குனிபவனும் முட்டாள்; குனியக் குனியக் குட்டுபவனும் முட்டாள்' என்பர். இனியாவது ஒன்றுபட்டு சுதாரிப்பார்களா நம்மவர்கள்? பார்ப்போம்!

– மின்னல் –

---

## ராஜபக்ஷ அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் மாபெரும் அரச எதிர்ப்புப் பேரணியும் போராட்டமும் நேற்று மாலை நுகேகொடையில் இடம்பெற்றன.

தொடர் விலையேற்றத்தைக் கண்டித்தும், தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஊழல் மோசடிகளுக்கு எதிராகவும், நாட்டில் தலைதூக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தியுமே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரமுகர்களும், பெருந்திரளான மக்களும் பங்கேற்றிருந்தனர். இதனால் நுகேகொட பகுதியில் கடும் வாகன நெரிசலும் ஏற்பட்டது.

இதில் உரையாற்றிய அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:–

ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் இன்று சர்வகட்சி மாநாடு நடைபெற்றது. நாட்டு வளங்களைக் கொள்ளையடித்த பஸில், மத்திய வங்கியைக் கொள்ளையடித்த ரணில், தரகுப்பணம் வழங்கிய கப்ரால் உள்ளிட்டவர்கள் இதில் பங்கேற்றனர். இவர்களுடன் என்ன பேச – கலந்துரையாட முடியும்? நாங்கள் சென்றிருந்தால், கோட்டா வீட்டுக்குச் செல்லுங்கள் என்பதையே கூறியிருப்போம்.

நிர்வாகக் கட்டமைப்பில் ஊழல், மோசடிகள் தலைவிரித்தாடுகின்றன. கடந்த 70 ஆண்டுகளில் நாட்டைச் சீரழித்துவிட்டனர். முன்னாள், இந்நாள் அமைச்சர்கள் ஊழல்கள் பற்றி கருத்துகளை வெளியிட்டுக்கொள் கின்றனர். இதுதான் எமது நாட்டு அரசியல். அவர்கள் இவர்களைப் பற்றியும், இவர்கள் அவர்களைப் பற்றியும் குறைகூறுவது வேடிக்கையாகிவிட்டது.

எனவே, ராஜபக்ஷ ஆட்சியை விரட்டியடிப்பது மட்டுமல்ல, புதியதொரு கலாசாரத்தை உருவாக்கும் பொறுப்பும் எமக்கு உள்ளது. மக்கள் சக்தி மூலம் ஆட்சியை விரட்ட முடியும் – என்றார்.

---

## வாக்குறுதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:–

இந்த நாட்டில் 30 வருடங்களுக்கு மேல் நடந்த யுத்தத்தின் விளைவைத்தான் இப்போது பொருளாதார நெருக்கடியாக நாங்கள் எதிர்கொண்டு கொண்டிருக்கின்றோம். அந்த யுத்தத்தை எதிர்கொள்வதற்காக பெருந்தொகை பணத்தை – நிதியை – நாடு செலவிட்டது. கடன்களை வாங்கிக் குவித்தோம். அவற்றின் தொடர்ச்சியாக ஏற்பட்ட நெருக்கடிதான் இன்று நாம் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி.

அந்த யுத்தம் ஏன் ஏற்பட்டது? காலாகாலமாக ஆட்சிக்கு வந்தவர்கள் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் போனதுதான் இன்றைய நிலைமைக்கு காரணம். பண்டா – செல்வா ஒப்பந்தத்தை அல்லது டட்லி – செல்வா ஒப்பந்தத்தை நிறைவேற்றி இருந்தால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்க வேண்டிய தேவை வந்திருக்காது. போர் நடந்திருக்காது.

போருக்கு முந்தியும் வாக்குறுதிகளை வழங்கினீர்கள். மீறினீர்கள். போருக்குப் பின்னரும் வாக்குறுதிகளை வழங்கினீர்கள். அவற்றையும் மீறுகின்றீர்கள். அதனால்தான் தீர்வு எட்டவில்லை. நீங்கள் வழங்கிய வாக்குறுதிகளை இனிமேலும் தாமதிக்காமல் நிறைவேற்றினீர்களானால் சர்வதேசம் உங்களை நம்பும். புலம்பெயர் தேசத்தில் இருப்பவர்கள் உங்களை நம்புவார்கள். இரண்டு தரப்பிலும் இருந்தும் சரியான பொருளாதார உதவிகள் கிடைக்கும்.

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அதிகாரப் பகிர்வை நடைமுறைப் படுத்தினால் மட்டுமே பொருளாதார மீட்சி உண்டு. அதிகார பகிர்வு இல்லாமல் அபிவிருத்திக்கு வாய்ப்பே இல்லை. ஆகவே அரசியல் தீர்வை எட்டுவதற்கு விசுவாசமாக உழையுங்கள். மிகுதிப் பிரச்சினைகள் தாமாகவே தீரும். – என்ற சாரப்பட கருத்துரைத்தார் சம்பந்தன்.



சபரிமலை
# ஸ்ரீ ஐயப்பன் ரேடர்ஸ்
## Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட்,
கிளிநொச்சி.

No. 315, Kandy Road,
Kilinochchi.

Tel:- 021 228 3701,076 307 8091




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்

077 986 2476 - 077 983 8091 எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

076 307 8091, 021 228 3701, 077 986 2470

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழ் தலைமைகளின் ஆலோசனை

நாடு எதிர்நோக்கியுள்ள மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுவது குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூட்டிய சர்வகட்சி மாநாடு நேற்று முதற்கட்டமாக நடைபெற்றிருக்கின்றது.

பல கட்சித் தலைவர்கள், பிரமுகர்கள் அந்த சர்வகட்சிக் கூட்டத்தை – அல்லது மாநாட்டை – பகிஷ்கரித்து வெளியில் நின்றனர்.

கூட்டத்தில் பங்குபற்றிய பிற கட்சித் தலைவர்கள், பிரமுகர்கள் கூறிய கருத்துக்களை ஜனாதிபதியும் அவரது அரசும் கணக்கில் எடுத்துக் கொள்வது பற்றிய ஊகங்கள் ஏதும் வெளியாகவில்லை.

ஆனால் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய மூன்று தமிழ்த் தலைவர்களும் – இரா.சம்பந்தன், த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன் மூவரும் – ஒரே விடயத்தைக் அங்கு சுட்டிக்காட்டினர்.

தமிழர் தரப்பின் இந்தக் கருத்தை, மேற்படி சர்வகட்சி மாநாட்டைத் தாம் பகிஷ்கரிப்பது தொடர்பாகத் தாம் வெளியிட்ட விளக்க அறிக்கையில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனும் கூட விவரித்திருந்தார்.

அதிகாரப் பகிர்வு (Devolution) இல்லாமல் அபிவிருத்தி (Development) இல்லை என்பதுதான் அது.

நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட மூன்று தமிழ்த் தலைவர்களும், கூட்டத்தில் கலந்து கொள்ளாத நீதியரசரும் வெவ்வேறு சொல்லாடல்களில் தெரிவித்த இந்த ஒரே கருத்து ஜனாதிபதி கோட்டாபயவின் சிந்தையில் ஏறியதா, அல்லது அவரின் வழமையான பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாண்மைத் திமிர்ப் போக்கில் இந்தக் கருத்தும் கவனிக்கப்படாமல், அவ்விளக்கம் நிராகரிக்கப்பட்டு, உதாசீனப்படுத்தப்பட்டதா என்பது தெரியவில்லை.

தேசிய இனப்பிரச்சினையை அமைதி முறையில் – சமாதான வழியில் – பேசித் தீர்ப்பதற்கான வாய்ப்பை பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தம் போன்றவை தந்தன. பேரினவாத மேலாதிக்க வெறிப் போக்கினால் பௌத்த, சிங்களம் அந்த உடன்பாடுகளைக் கிழித்தெறிந்தது. அமைதி முறையில் இந்தத் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வாய்ப்பை தனது ஆயுத பலத்தால் குழப்பி, சிறுபான்மையினரை அடக்க முற்பட்ட சிங்களம் அதன் விளைவை இன்று வரை எதிர்கொண்டபடி இருக்கின்றது என்பதுதான் உண்மை.

அதையே இந்த நான்கு தமிழ்த் தலைவர்களும் இப்போதும் எடுத்துரைத்துள்ளனர்.

நீதி, நியாயத்தை நிலைநாட்டத் தவறி, பேரினவாதப் போக்கில் செயற்பட்டமையினால்தான் நாடு முப்பது ஆண்டு காலப் போரையும், அதன் பின்னரான தொடர் அழிவுகளையும், பொருளாதாரப் பின்னடைவையும் எதிர்கொண்டு நிற்கின்றது.


நியாயமான தீர்வு ஒன்று காணப்படுமானால் சர்வதேச சமூகம் இலங்கையின் மீட்சிக்குப் பெரும் பொருளாதார உதவிகளை வழங்கும். வெளிநாட்டில் இருக்கும் பலம் பொருந்திய நமது புலம்பெயர் சமூகம் நம்பிக்கையுடன் நாட்டில் முதலீடுகளைச் செய்யும். நாடும் சுபீட்சமடையும்.

இந்த நாட்டின் சிறுபான்மையினரையும் சமபிரஜைகளாக மதிக்கும் மனிதாபிமானம், பௌத்த, சிங்களப் பேரினவாதத்திடம் ஏற்படாத வரையில் நியாயத் தீர்வுக்கோ, இன சௌஜன்யத்துக்கோ, பொருளாதார சுபீட்சத்துக்கோ வழியில்லை.

தமிழ்த் தலைவர்கள் காட்டிய இந்த நல்லாலோசனைகளை நாட்டின் தலைவர் உணர்ந்து கொண்டாராயின் அவருக்கும், அவரின் அரசுக்கும், அவரின் சிங்கள தேசம் உட்பட்ட இலங்கைத் தீவுக்கும் மீட்சி உண்டு. இல்லையே தொடர்ந்தும் அழிவுதான் எமக்கு மிஞ்சும்.

# ராஜபக்ஷக்களால் 50 ஆண்டுகள் பின்நோக்கி நகர்ந்தது இலங்கை!

## மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் சுட்டிக்காட்டு



இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி 1970 ஆம் ஆண்டுகளில் முகங்கொடுத்ததைப் போன்றது என இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் டபிள்யூ.ஏ.விஜேவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

1970ஆம் ஆண்டுகளில் காணப்பட்டதைப் போன்ற பற்றாக்குறை மற்றும் வரிசைகளை தற்போது இலங்கை எதிர்கொள்கின்றது என விஜேவர்தன கூறியுள்ளார்.

1970ஆம் ஆண்டுகளில் விடியற்காலையில் நூற்றுக்கணக்கான மக்கள் பாண் வரிசையில் காத்திருந்தார்கள் வயதான ஆண்களும் பெண்களும் குப்பைகளில் உணவு தேடினார்கள்.

கிராமப்புறங்களில் காய்கறிகள் மற்றும் அரிசியை திருடர்கள் திருடிச் சென்றுள்ளார்கள். இலங்கையில் அப்போது ஒரு கோடியே 30 லட்சம் மக்கள் வாழ்ந்த போது காணப்பட்ட அதே நெருக்கடி தற்போது 2 கோடி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1970 ஆம் ஆண்டு நியூயோர்க் டைம்ஸ் சஞ்சிகையில் வெளியான அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை ஒப்பிட்டு இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் டபிள்யூ.ஏ.விஜேவர்தன தகவல் வெளியிட்டுள்ளார்.

அந்தக் கட்டுரைக்கமைய, ஒரு கோடியே 30 லட்சம் மக்கள் வாழ்ந்த தேசத்தில் பாரிய உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. பணவீக்கத்தால் நாடு திணறியது. அதே திணறலை தற்போது இலங்கை எதிர்கொண்டுள்ளது.

அந்தக் காலப்பகுதியில் மக்கள் உயிர்வாழப் போராடினார்கள். ஒரு பாண் கொள்வனவு செய்வதற்கு மக்கள் போராடினார்கள். அணிவதற்கு ஆடையின்றி கிடைக்கும் துணிகளை சுற்றிக் கொண்டார்கள். பசியின் கொடுமையை மக்கள் அனுபவித்தார்கள்.

தவறான விவசாயமே இலங்கையின் அப்போதைய அவல நிலைக்கு அடிப்படைக் காரணமாகக் காணப்பட்டது.

சர்வதேசத்தின் தேவைக்கமைய செயற்பட முயற்சித்து ஒரு நல்ல நாடு பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. தற்போதைய அரசு கடந்த கால படிப்பினைகளை ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளவில்லையா என இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் டபிள்யூ.ஏ.விஜேவர்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

சமகால அரசிலும் அத்தியாவசியப் பொருள்களைப் பெற மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றமையுடன், உயிரிழப்புகளும் பதிவாகி உள்ளன.

இலங்கை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றப் போகின்றோம் என ராஜபக்ஷ சகோதரர்கள் தேர்தல் களத்தில் சூளுரைத்தார்கள். அதற்கமைய 69 லட்சம் என்ற பெரும் பான்மை சிங்கள மக்களின் வாக்குகளை பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இன்று மக்களை நடுத்தெருவில் அலையவிட்டுள்ளார் என நீண்ட வரிசையில் காத்திருக்கும் பலர் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீன்பிடித் துறைமுகங்கள் அபிவிருத்தி இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்யப்படும்!

கொழும்பு, மார்ச் 24

பரஸ்பர உடன்பாடுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒத்துழைப்பு வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, பருத்தித்துறை, பேசாலை, குருநகர், பலப்பிட்டிய மற்றும் ஏனைய பரஸ்பர உடன்பாடுகள் எட்டப்படும் இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக இந்திய அரசின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காக இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கடற்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# காணிகளை இந்தியாவுக்கு வழங்குவதற்கு திருகோணமலை மக்கள் எதிர்ப்புப் போர்!

இந்திய நிதியுதவியுடன் திருகோணமலை சம்பூர் சூரிய சக்தி மின் திட்டத்துக்காக மக்களின் காணிகளை கையகப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தை அண்மித்த சம்பூர் கிராமத்தில் உள்ள சிறுபான்மை தமிழ் மக்களின் காணிகளை கையகப்படுத்தி இந்திய – இலங்கை சோலர் மின் உற்பத்தி மையத்தை அமைக்க வேண்டாம் என ட்ரின்கோ சேவ் அமைப்பின் தலைவர் எஸ்.எச்.கிரிஷான் குமார் தெரிவித்துள்ளார்.

அண்மையில் திருகோணமலை ஊடகக் கழகத்துக்கு கிழக்கிலிருந்து ஊடகவியலாளர்களை அழைத்த கிரிஷான் குமார், நிலக்கரி மின்திட்டத்துக்காக மக்களின் காணிகளை சுவீகரிக்க 2015 ஆம் ஆண்டு முதல் தயாராகி வருகின்றார் எனத் தெரிவித்தார்.

பொதுமக்களின் எதிர்ப்பால் இந்தத் திட்டத்துக்காக நிலம் கையகப்படுத்துவது தடுக்கப்பட்டது. மீண்டும் இவ்வாறான காணிகள் கையகப்படுத்தப்படுமா என்ற சந்தேகம் சம்பூர் மக்களிடையே தற்போது எழுந்துள்ளது.

பல தசாப்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வறுமையில் வாடும் சம்பூர் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். சம்பூர் மக்களின் காணிகள் மீளக் கையகப்படுத்தப்படுவதை எதிர்க்கின்றோம் என ட்ரின்கோ சேவ்அமைப்பின்தலைவர்தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மின் கம்பனி, என்.ரி.பி.சி. இந்தியா மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க மார்ச் 11 அன்று கைச்சாத்திடப்பட்டது.

100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் இந்தத் திட்டத்துக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மின் சக்தி அமைச்சர் பவித்ராதேவி வன்னி ஆராய்ச்சி, விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ.சானக, சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க ஆகியோரது பிரசன்னத்துக்கு மத்தியில் நடைபெற்றது.

என்.ரி.பி.சி. சர்வதேச வர்த்தக அபிவிருத்தி பிரிவின் தலைமை அதிகாரி நரிந்தர் மோகன் குப்தா, இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி. பேர்டினாண்டோ, ரி.பி.சி.எல். தலைவரும் இலங்கை மின்சார சபையின் உப தலைவருமான என்.எஸ். இலங்ககோன் உள்ளிட்டோர் இந்த முத்தரப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

அன்றைய தினமே மன்னார் மற்றும் பூநகரியில் 500 மெகாவாட்ஸ் காற்றாலை மின் நிலையங்களை அமைப்பதற்கு அதானியின் கிரீன் எனர்ஜி நிறுவனத்துடன் நிதி அமைச்சு ஒப்பந்தம் செய்துகொண்டது.

காலைக்கதிர்
Kalaikkathir

# அரசின் சர்வகட்சி மாநாடு; பஸ்போன பிறகு கைகாட்டல்!

## வேலு குமார் கிண்டல்

'அரசின் சர்வகட்சி மாநாடு, பஸ் போன பிறகு கை காட்டும் வேலை ஆகும்.' என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

இன்றைய அரசு, ஆரம்பம் முதல் இன்று வரை ஒரு தீர்மானத்தைக் கூட உரிய நேரத்தில் எடுக்கவில்லை. இன்று நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து நிற்கின்றது. முழு நாடும் கறுப்பு சந்தையாக மாறி இருக்கின்றது. மொத்த பொருளாதாரமும் மீளக் கட்டியெழுப்ப முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றது.

இந்நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு அரசிடம் பல மாதங்களுக்கு முன்னரே பல வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் அரசு அதனைக் கண்டுகொள்ளவில்லை. செவிமடுக்கவில்லை. தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டது. இன்று சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவது, பஸ் போன பிறகு கை காட்டும் வேலையாகும்.

நாட்டின் பொருளாதாரத்துக்கு செய்யக்கூடிய அனைத்து மோசமான நடவடிக்கைகளையும் செய்துவிட்டனர். கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு, 200 கோடி ரூபாவுக்கு அதிகமான பணம் அச்சிட்டுவிட்டனர். அதுவே ரூபாவின் கொள்வனவு சக்தியை வீழ்த்திவிட்டது.

அதுமட்டுமல்லாமல் அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதியை ரூபா 200 ஐ விட அதிகரிக்க விடமாட்டோம் என்று அடம் பிடித்தனர். பொருளாதார நிலைமைகளை மீறிக் கட்டுப்படுத்தினர். அதன் மூலம் தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு லாபம் உழைக்க வழிசமைத்துக் கொடுத்தனர். இதனால், மேலும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. டொலர் பிரச்சினை மேலும் நெருக்கடிக்கு உள்ளானது.

கடன் சுமையை மீளக் கட்டமைக்குமாறு கேட்டோம். அதனையும் செய்யவில்லை. இன்று அனைத்தையும் முடித்துவிட்டு சர்வ கட்சி மாநாடு என்கிறார்கள். இதுவும் ராஜபக்ஷக்களின் வெறும் மூடி மறைப்பு நாடகமே ஆகும். – என்றார்.

# சட்டம் மற்றும் ஒழுங்குகள் கடைப்பிடித்தல்; ஆலோசனைக் கூட்டம் ஆலையடி வேம்பில்

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் மக்கள் தொடர்பாடல் பொலிஸ் பிரிவினர் மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்கள் உடனான விசேட கலந்துரையாடல் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்றது.

பிரதேச செயலாளர் வி.பபாகரனின் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் மக்கள் தொடர்பாடல் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.எம்.சதாத், பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர், கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் பரிமளவாணி சில்வெஸ்டர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் மக்கள் தொடர்பாடல் பொலிஸ் பிரிவினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

எதிர்காலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படுவதற்கு பொலிஸ் திணைக்களத்துடன் ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் இணைந்து செயற்படுவது தொடர்பில் ஆராயும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிரதேச செயலாளர் தனது தலைமையுரையில் –

பொலிஸாரும் பிரதேச செயலகமும் இணைந்து செயற்படவேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார். மேலும் சட்டம், ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படுவதற்கு பிரதேச செயலகத்துக்கு பொலிஸ் திணைக்களம் வழங்க வேண்டிய ஒத்துழைப்பு தொடர்பாகவும் எடுத்துரைத்தார்.

இதேநேரம் இங்கு உரையாற்றிய மக்கள் தொடர்பாடல் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.எம்.சதாத் தானும் தனது பிரிவும் பொலிஸ் நிலையமும் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த எவ்வேளையிலும் தயாராக உள்ளதாகவும் பிரதேச செயலகத்துக்கும் கிராம உத்தியோகத்தர்களுக்கும் தம்மால் முடிந்த ஒத்துழைப்பை வழங்குவேன் எனவும் உறுதியளித்தார்.

இதன் முதற்கட்டமாக வாரம் இரு நாள்களில் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் பிரிவிற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை கடமையில் அமர்த்தவும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் வாரம் இரண்டை தெரிவு செய்யவும் முடிவு செய்யப்பட்டது.

# நுகர்வோர் அதிகார சபையால் யாழில் 78 வழக்குகள் பதிவு!

யாழ்.மாவட்ட நுகர்வோர் அதிகார சபை கடந்த மாதம் முதல் நேற்று வரைக்கும் மேற்கொண்ட திடீர் நடவடிக்கைகளில் போது 78 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் அறிவித்தார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த ஊடக அறிவித்தலிலேயே இந்தவிடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும், அந்த அறிவிப்பில்–

நிபந்தனை அடிப்படையில் பால்மா பொருள்கள் விற்பனை செய்தல், விற்பனை செய்ய மறுத்தல், விலையை மாற்றி விற்பனை செய்தல், காலாவதியான பொருள்களை விற்பனை செய்தல், விலையை வெளிக்காட்டாமை மற்றும் பொதி செய்யப்பட்ட பொருள்களின் மீது முறையான தரவுகள் வெளிக்காட்டாமை தொடர்பாகவே வழக்குகள் பதிவு செய்யப்பட்டவையாகும்.

யாழ்.மாவட்ட நுகர்வோர் அதிகார சபை தொடர்ச்சியாகப் பொது மக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வை நடத்தி வருகின்றது என்பதோடு இறுதியாகப் பாவனையாளர் தினம் அன்றும் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்றை நடத்தி பொதுமக்களுக்குத் துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

மேலும், அன்றையதினம் திரவ பெற்றோலியவாயு களஞ்சிய சாலையில் இருப்பிலிருந்த வாயு கொள்கலன்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பாவனையாளர் அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்டது.

மேலும், யாழ்.மாவட்ட நுகர்வோர் அதிகார சபை பொதுமக்களிற்கு இயன்றளவு சேவையை வழங்க காத்திருப்பதோடு பொது மக்களிமிருந்து பெறுமதியான முறைப்பாடுகளை எதிர்பார்க்கின்றது. பொது மக்கள் துரித சேவை – 1977, யாழ். நுகர்வோர் அலுவலகள் அதிகார சபை – 0212229001 தொலைபேசி அழைப்பினூடாக எந்நேரமும் முறைப்பாட்டினை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அசாத் சாலி தாக்கல் செய்த மனு மேல் நீதிமன்றத்தினால் நிராகரிப்பு!

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தாக்கல் செய்த மனுவை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று (புதன் கிழமை) நிராகரித்துள்ளது.

மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து நஷ்ட ஈட்டை பெற்றுத்தருமாறு கோரி மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த மனு நிராகரிக்கப்பட்டது.

நாட்டின் சட்டம் மற்றும் முஸ்லிம் சட்டம் தொடர்பாக தீவிரவாதக் கருத்துக்களை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஆளுநர் அசாத் சாலி கைது செய்யப்பட்டார்.

சுமார் எட்டு மாதங்களுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர், கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் அதிகரிக்கும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள்

யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளன பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதர் ராகேஸ் நடராஜ் ஜெயபாஸ்கரனை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் போது இலங்கை எல்லைக்குள் இந்திய இழுவை மடி படகுகளின் வருகை மீளவும் அதிகரித்துள்ளதாகவும், குறிப்பாக எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய தீவகப் பகுதிகளில் இந்திய படகுகள் இலங்கை எல்லைக்குள் வருவதாகவும் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

சந்திப்புக்குப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் அன்னராசா – தீவகப் பகுதிகளில் எல்லை தாண்டிய இந்திய இழுவைப் படகுகளின் வருகை கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் அதிகரித்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு இந்தியத் துணைத்தூதரிடம் கோரியதாகத் தெரிவித்துள்ளார்.

# ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் மட்டு. காத்தான்குடியில் கைதானார்

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் வழிகாட்டலில் காத்தான்குடி கடற்கரை வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது இவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 9 கிராம் 650 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதான நபர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதுடன் பொலஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

# எரிபொருள் நெருக்கடி நிலைமை வார இறுதியில் குறைவடையுமாம்!

## அமைச்சர் காமினி லொக்குகே நம்பிக்கை



நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு, இந்த வார இறுதியில், கிரமமாக குறைவடையும் என எதிர்பார்க்கிறேன் என வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாடாளுமன்றில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டின்போது, பிரச்சினையின்றி எரிபொருளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலை நாட்டில் ஏற்படும்.

தற்போது, 20 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளைக் கையிருப்பில் வைத்துக்கொண்டு, விநியோகத்தை முன்னெடுக்கக்கூடிய நிலை உள்ளது.

வாகனங்களுக்கு எரிபொருளை நிரப்புவது போன்று, பிளாஸ்டிக் கலன்களில் எரிபொருளைக் கொள்வனவு செய்யும் நிலையும் அதிகரித்துள்ளது. மூன்று, நான்கு நாள்களுக்கு அவசியமான, டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன கையிருப்பில் உள்ளன.

இந்த நிலையில், நான்கு நாள்களுக்கு ஒரு முறை, எரிபொருள் கப்பல்கள் நாட்டுக்கு வரவுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

# ஆட்சியாளர்கள்மீது மக்கள் அதிருப்தி!

## போராட்டத்திற்கு தயாராவதாக ஹக்கீம் அறிவிப்பு

இந்த ஆட்சியாளர்கள் மீது நாடுபூராகவும் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அதிருப்தி சாதாரணமானதல்ல. எனவே, முஸ்லிம் காங்கிரஸ் ஏனைய கட்சிகளோடும் இணைந்து நாட்டை மீட்பதற்கான பலமானதொரு போராட்டத்துக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்தார்.

சம்மாந்துறை,முஸ்லிம் காங்கிரஸ் சார்பு எஸ்.ரீ.ஆர். இளைஞர் அணியின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா,அப்துல் மஜீத் நகர சபை மண்டபத்தில் அதன் தலைவர் ஹாபிழ் ஹாதிக் இப்ராஹிம் தலைமையில், நடைபெற்றபோது, அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் காட்டமாகக் கூறினார்.

முன்னதாக, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சம்மாந்துறை, நெல்லுபிட்டி சந்தியிலிருந்து வரவேற்கப்பட்டு, ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தமது உரையின் போது மேலும் தெரிவித்தவை வருமாறு –

ஒரு ‘நல்ல ’ஜனாதிபதி கிடைத்திருக்கிறார். அவருக்கு நல்லது நடந்தால் அவரால் நடந்தது என்கிறார். சில விடயங்கள் பிழையாக நடந்துவிட்டால் தான் அதற்குப் பொறுப்பில்லை என்று சொல்வார். நாட்டு மக்களுக்காக ஆற்றுகின்ற உரையில் ’அதற்கு நான் பொறுப்பில்லை’ என்று சொல்கின்றார். அப்படியான ஒரு ‘நல்ல ’ஜனாதிபதி எங்களுக்குக் கிடைத்திருக்கிறார்.

இந்த ஜனாதிபதி சம்பந்தமாக ஒருவர், ‘நீங்கள் திணைக்களம், திணைக்களமாக சென்று பார்க்கிறீர்கள். தயவுசெய்து பெற்றோல் நிலையத்தில் இருக்கின்ற வரிசையில் நின்று பாருங்கள்’ என்றும், ‘தைரியம் இருந்தால் நீங்கள் இங்கு வாருங்கள்’ என்றும் இந்த நாட்டு ஜனாதிபதியை விளித்து ஒருவர் பதிவிட்டிருக்கிறார்.

‘இப்போது எங்கே நிம்மதி’ என்ற பாட்டு எனக்கு நினைவிற்கு வருகின்றது. எங்கே பெற்றோல் அங்கே எனக்கோர் இடம் வேண்டும். எங்கே டீசல் அங்கே எனக்கோர் இடம் வேண்டும். எங்கே மண்ணெண்ணெய் அங்கே எனக்கோர் கடன் வேண்டும் என்றவாறாக பாடல் அமைய வேண்டும்.

இப்போது எல்லோரிடமும் கடன் கேட்டு திரிகின்றார்கள். நாட்டினுடைய பொருளாதார முகாமைத்துவம் இன்று படுமோசமாகப் பாதிக்கப்பட்டு, மக்களைப் படு பாதாளத்தில் தள்ளி இருக்கிறது. எந்த அரசாங்கமும்

ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்களில் இவ்வளவு மக்களின் சாபத்தைப் பெற்றதை நாங்கள் இதற்கு முன்பு கண்டதே கிடையாது. எல்லோரும் ‘வீட்டுக்குப் போ’ என்று சொல்லுகின்ற அளவுக்கு இன்று ஆட்சியாளர்களின் நிலைமை ஆகிவிட்டது.

முஸ்லிம்களின் கஷ்டத்திலும், நஷ்டத்திலும் தான் அவர்களது அரசியல் பிழைப்பு நடக்கிறது.

இங்கு சம்மாந்துறையில் ஒரு வீட்டில் ஒருவருக்கும் தெரியாமல் மிகப் பெரிய குண்டு வெடிப்புக்கான இரசாயனப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. நிந்தவூரிலும் அப்படித்தான். சாய்ந்தமருதில் தற்கொலைக் குண்டுதாரிகளாகத் தங்களை மாய்த்துக் கொண்டார்கள். ஆனால், இப்படியான ஒரு தீவிரவாதம் இந்த சமூகத்துக்குள் இருந்ததை நாங்கள் யாரும் காணவில்லை. எங்களுக்கு அப்படியான உணர்வு ஏற்படவுமில்லை. அந்தக் காலகட்டத்தில் இப்படியான ஒரு தீவிரவாதம் இருந்தது யாருக்கும் தெரியவில்லை. ஆனால், இவையெல்லாம் ஆரம்பித்தது அம்பாறையில் ஒரு கொத்துரொட்டி கடையில்தான் .அங்குதான் இந்தப் பிரச்சினைக்கான ஆரம்ப வித்து இடப்பட்டது. இப்போது நடக்கின்ற வழக்குகளில் இந்த விடயங்கள் சொல்லப்படுகின்றன. அதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள்தான் இப்போது சட்டத்திற்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பாக இருக்கிறார்கள். அதனுடைய சூத்திரதாரிகளின் பெயர்களைக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.

நாட்டினுடைய கத்தோலிக்க மக்களின் பேராயர் ஜெனிவாவுக்கு போகிறார். பாப்பரசரைச் சந்திக்கிறார். இந்த நாட்டு ஆட்சியாளருக்கெதிராக முறையீடு செய்கிறார். கர்தினால் ஆண்டகை சென்று பேசுவதென்றால் ஒன்றுமில்லை. தப்பித்தவறி முஸ்லிம் ஒருவர் போனால் அவ்வளவுதான்.

எல்லோருக்கும் பீதி வந்திருக்கிறது. இந்த சமூகத்தை பீதி கொள்ள வைத்திருப்பதற்காக அப்படியானதொரு விடயத்தில் இவர்கள் வெற்றி கண்டிருக்கிறார்கள். எல்லோரும் அடங்கிப் போய் விட்டார்கள். இனியும் அடங்கி இருக்க முடியாது. அநியாயத்தைத் தட்டிக் கேட்க வேண்டும். அவர்களுக்குள் இருந்து நடந்த இரகசிய திட்டமிடல்கள் என்னவென்பதை புலனாய்வாளர்களே இன்று உச்ச நீதிமன்றத்தில் போய் மனித உரிமை வழக்கில் சொல்கிறார்கள் விசாரணைகளைத் திசை திருப்புவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

புதிய அறிக்கை என்னவென்றால், இந்த குண்டு வைப்புக்கு பின்னால் இலங்கையில் பாதுகாப்பு துறை இருந்ததா? என்பதை விசாரிக்க வேண்டும் என்பதாகும். நேரடியாக அப்படியானதொரு கேள்வியை மனித உரிமை ஆணையாளரே முன்வைக்கிற அளவுக்கு விடயம் பெரிதாகிவிட்டது. ஏனெனில், இந்த விடயங்கள் இப்போது அம்பலத்துக்கு வருகின்றன. அப்பாவி இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் பிடிபட்டார்கள். ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரையும் அதனோடு முடிச்சுப்போடலாம் என்று பார்த்தார்கள். எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார்கள். ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் நான் மிகத் தீவிரமாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டேன். அதுவும் எனக்குத் தெரிந்த சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் குறுக்கு மறுக்காகக் கேள்விகள் கேட்டனர். ஆனால் நான் இலகுவில் பிடியில் அகப்படும் ஆள் அல்லன்.

எனினும், இவற்றுக்குப் பின்னால் இருக்கின்ற இரகசியங்கள் இப்போது அம்பலத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன.

எப்படியாவது முஸ்லிம் தலைமைகளின் தலைகளில் இவற்றைப் போட்டு தேங்காய் உடைக்கலாம் என்று பார்த்தார்கள். இன்று இதற்குப் பின்னால் ஒரு பெரும் சதி இருக்கிறது என்பது சம்பந்தமான சந்தேகம் பலமாக வலுத்துவிட்டது.

ஏனென்றால், இந்தப் பேச்சையும் இப்போது உளவுத்துறையினர் கொஞ்சம் பேர் கேட்டுக் கொண்டிருப்பார்கள். இதனுடைய பதிவும் கொஞ்சம் வெளியில் போகும். நானும் கொஞ்சம் கவனமாகத்தான் பேச வேண்டும். நான் இங்கு சொல்கின்ற விடயங்கள் அனைத்தும் இப்போது பகிரங்க வெளியில் சொல்லப்படுகின்ற விடயங்களாகும். அவை மனித உரிமைகள் ஆணையாளரால் ஐக்கிய நாட்டு அறிக்கையில் சொல்லப்படுகின்ற விடயங்களாகும். உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களில் சத்தியக் கடதாசிகளால் கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவல்களாகும்.

எனவே, இவற்றையெல்லாம் நாங்கள் ஒளித்து மறைத்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் இந்த சமூகத்துக்கு எதிரான இந்தப் பாய்ச்சல் இனியாவது முடிவுக்கு வருமா என்றால் அவை இலேசில் முடிகின்ற விடயங்கள் அல்ல. எப்போதும் அதனைச் சீண்டி விட்டு அதில் குளிர் காயலாம் என எத்தணிக்கின்றனர்.

பாலமுனையிலும் சிலை வைப்பதற்கான முயற்சி நடந்தது. இப்படி ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒன்றில் சீண்டிப் பார்ப்பது பிழைப்பாகி விட்டது. அத்தோடு இந்தப் பெரும்பான்மை சிங்கள மக்களைக் கொஞ்சம் உசுப்பேத்தி விடுவதும் நடக்கின்றது. ஏனென்றால், தங்களுடைய ஆட்சி ஆட்டம் காண்கின்றது என்றவுடனேயே இருக்கின்ற ஒரே ஓர் ஆயுதமாக இடி இடிக்கும் போது இரும்பை தூக்கிக் கொண்டு செல்கின்ற மாதிரி, இந்த வேலையைத்தான் அவர்கள் பார்ப்பார்கள். எனவே, அதற்கு அஞ்சி ஒடுங்கி இனியும் பயந்து மூலையில் முடங்கிப் போய் இருக்கும் ஒரு சமூகமாக நாங்கள் இருக்க வேண்டிய அவசியமில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் என்ற இயக்கத்தின் வீரியம் இன்று ஏதோ விறைத்துப் போய் விட்டதாக சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இனி காலம் கனிந்து விட்டது. ஏனென்றால், இந்த இயக்கத்தை நம்பி இருக்கின்ற மக்கள் முன்னிலையில், சிலர் இந்த இயக்கத்துக்கு முரணான நோக்கத்தில் நடந்து கொள்கின்றார்கள் என்ற பரவலான விமர்சனம் பேசப்படுகிறது.

அவர்களும் இதில் தெளிவு பெற வேண்டும் என்பதற்காகப் பொறுமையோடு இருந்தோம். ஏனென்றால், இந்தக் கட்சியைக் கூறு போடுவதற்குப் பார்த்துக் கொண்டிருக்கின்ற சக்திகளுக்கு இடம் கொடுத்து விடக்கூடாது என்பதற்காக மிக நிதானமாக அந்த விடயங்களைக் கையாள்வது என்னுடைய பலவீனம் என சிலர் நினைக்கலாம்.

ஒவ்வொரு தேர்தல் முடிந்தவுடன் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பலத்தை சீர்குலைப்பதற்கு அதிகாரங்களைக் கொடுத்து மக்களை வசப்படுத்துவதற்கு நிறைய எத்தனிப்பது தொடர்ந்தும் எமது வரலாற்றில் நடந்துகொண்டு வருகின்றது. மறைந்த தலைவருடைய காலத்தில் இருந்து அது நடந்து வருகின்றது. அவரும், நாங்களும் சந்திக்காத சவால்கள் இல்லை. நாங்கள் பேசாத வழக்குகள் இல்லை. தொடர்ந்தும் இவ்வாறான பிரச்சினைகள் எவை வந்தாலும் தைரியமாக அவற்றுக்கு முகம் கொடுப்பதற்குப் பலமான இயக்கமும் போராளிகளும் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையோடு தான் இந்த இயக்கம் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால், நேற்று முளைத்த காளான் இயக்கங்களுக்கு இவையெல்லாம் கிடையாது. அவர்கள் எல்லாம் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து அரசியல் அடையாளத்தைப் பெற்றவர்கள். இப்போது அவர்களுக்கு இருக்கிற பெரிய சான்றிதழ் ஏதோ இந்த அரசாங்கம் எங்களைப் பழிவாங்கப்பார்க்கிறது என்று சொல்லிக் கொள்வதாகும். உங்கள் எல்லோரையும் விடவும் பழிவாங்கப்பட்டவர்கள் இந்த முஸ்லிம் காங்கிரஸில் இருக்கிறோம். எங்களைப் பழி வாங்குகிறான்; பழிவாங்குவான் என்று சொல்லிச் சொல்லி நாங்கள் அழுது திரியவில்லை. எங்களுடைய அரசியலில் இரண்டறக் கலந்த விடயங்களைப் பற்றி நாங்கள் அங்கலாய்க்கவில்லை. அங்கலாய்க்க வேண்டிய அவசியமுமில்லை. திடமாக உறுதியாக இவற்றுக்கெல்லாம் முகம் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

நிச்சயமாக இந்த ஆட்சியாளர்கள் மீது நாடுபூராகவும் ஏற்பட்டிருக்கின்ற அதிருப்தி சாதாரணமானதல்ல. அதில் முஸ்லிம் காங்கிரஸ் ஏனைய கட்சிகளோடும் இணைந்து பலமான ஒரு போராட்டத்துக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆனால், அது இலேசான காரியம் அல்ல. ஏனென்றால், நாடு அப்படியான நிலைமைக்கு வந்துவிட்டது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாட்டிலும் பிச்சை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பில்லியன் ரூபாவை மீண்டும் இந்தியா கொடுத்திருக்கிறது. இன்னும் இரண்டரை மாதங்களில் அது முடிந்து விடும். அதுக்குப் பிறகு வெறெங்கு செல்வது? இப்படியே போய்க் கொண்டிருக்கலாம். ஆனால், ஒன்றை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். இதே மாதிரி நிலைமை கிரேக்கத்துக்கு வந்தது லெபனானுக்கு வந்தது. ஏன் நாடு வங்குரோத்து நிலைக்கு வந்து விட்டால் வேறுவழியில்லை. கிரேக்கத்தில் நடந்தது ஒரு வருடத்தில் மூன்று முறை ஆட்சி அமைத்து அமைத்துப் புரட்டியது. எவருக்கும் ஆட்சி அமைக்க இயலாது.

மக்களுக்கு அறவே திருப்தி இல்லை. ஒவ்வொரு நாளும் விலைவாசி ஏறிக் கொண்டுதான் போகும். கட்டுப்படுத்த முடியாது. அதுதான் இப்போது வரப்போகின்றது. ஆட்சியைப் பிடிப்பதில் அவசரப்படுவதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. இவர்களால் நாடு அப்படியே நாசமாகிப் போய்விட்டது.

எனவே, இந்தப் பிரச்சினையில் இருந்து மீள்வதற்கு இந்த ‘ஏழு மூளையாரை’ நம்பிப் பயனில்லை.



எல்லாம் சாபம். பதைக்கப் பதைக்க முஸ்லிம்களுடைய ஜனாஸாக்களை எரித்த சாபம் இந்த ஆட்சியை ஒருநாளும் சும்மா விட்டுவைக்காது. எத்தனை பேர் அழுது பிரார்த்தித்தார்கள்.

எப்படியான தைரியத்தில் பேசினார்கள். எங்கெல்லாம் முஸ்லிம் ஊர்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் கொரோனா பரவல் என்று கூத்துக் காட்டினார்கள். குறிப்பாக அவ்வாறாகச் செயற்பட்ட

இரண்டு ஊடகங்கள் இருக்கின்றன. அந்த ஊடகங்கள் கூட இப்போது விழுந்தடித்துக்கொண்டு எதிர்க்கட்சிகளுடைய கூட்டங்களைக் காட்டுகின்றன. காலையிலேயே பத்திரிகைக் கண்ணோட்டம் வாசிக்கின்ற பெயர் பெற்ற ஊடகங்கள் – இந்த அரசாங்கத்தின் ஊதுகுழலாக இருந்த ஊடகங்கள் இன்று இந்த அரசாங்கத்தைத் தாறுமாறாக விமர்சிக்கின்றன. ஏனென்றால், விமர்சிக்காவிட்டால் ஊடகத்தை ஒருவரும் பார்க்க மாட்டார்கள். அதற்காக விமர்சிக்கிறார்கள். இந்த சூழலில்தான் இன்று நாங்கள் இனிமேலும் அடங்கிப் போய் ஒடுங்கிப்போய் இருப்பதை விடவும் மிகத் தெளிவாக இந்தப் போராட்டத்தில் இறங்க வேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் எத்தனையோ ஆட்சி மாற்றங்களை உருவாக்கியது. எங்களால் செய்ய முடியும் என்பதை நாங்கள் கூட்டாக, அனைத்து சிநேக சக்திகளோடும் இணைந்து சாதிக்க வேண்டும்.

இன்று சகோதர தமிழ் சமூகத்தோடு எங்களுக்கு சில முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால், நாங்கள் சிநேகபூர்வமாக அவர்களையும் அரவணைத்துப் போகின்ற ஓர் அரசியலைத் தான் செய்து கொண்டிருக்கின்றோம். இப்போது நாளைக்கோ, நாளை மறுநாளோ ஜனாதிபதி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சந்திக்கப் போகிறாராம் என்று ஒரு கேள்வி. அதற்கு உள்ளேயும் சில பிரச்சினைகள் போய்க் கொண்டிருக்கின்றன. ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேசி இனி ஒரு பிரயோசனமும் கிடையாது . வேறு வழி இல்லாமல் பேசுகிறார்.

மேற்கு நாடுகளிலிருந்து வருகின்ற அழுத்துக்காக போய் சும்மா சாட்டுக்குப் பேசுவது எல்லோருக்கும் தெரியும்.

இப்போது சர்வகட்சி மாநாடு என்று எங்களை அழைத்து இருக்கிறார்கள். 23ஆம் திகதி எங்களுக்கு அழைப்பு வந்திருக்கிறது. இந்த சர்வகட்சி மாநாட்டுக்கு ஆலோசனைகளை அவர்களுக்கு முதலில் எழுதி தரட்டுமாம் என்று சொல்லி இருக்கிறார்கள்.

ஆலோசனைகளை எழுத்தில் தரச் சொன்னால், ‘ஜனாஸாக்களை எரித்ததற்கு பாவ மன்னிப்புக் கேளுங்கள் ’ என்று முதலில் சொல்ல வேண்டும். இப்போது எல்லாவிடத்திலும் தாராளமாக நல்லடக்கம் செய்ய விடுகிறார்கள். எல்லாம் இரவோடிரவாக நடந்தது. வேறொன்றுமில்லை இதெல்லாம் ஜெனீவா பேரவையின் பிரதிபலன். சென்றமுறை ஜெனீவாவில் பிரேரணை நிறைவேறப்போகிறது. என்பதற்காக இம்ரான்கானை அழைத்துவந்து வைத்து அவர் சொல்கிறார் என்பதற்காக ஒரு நாடகத்தை காட்டி, ஜனாஸாக்களை எரிக்கின்ற விடயத்தில் ஒரு மாற்றம் செய்தார்கள். ஆனால், கொரோனாவில் மரணித்தால் ஓட்டமாவடிக்குத் தான் கொண்டு செல்ல நேர்ந்தது.

இப்படியான ஒரு நாடகத்தை நடித்து முழுக்க முழுக்க கேலிக் கூத்தாக இந்த விடயத்தை மாற்றி உலகத்தில் ஓர் இடத்திலும் இல்லாத இந்த அநியாயத்தை செய்த இந்த ஆட்சியாளர்களுக்கு கூஜா தூக்கிய யாரும் இனி அடுத்த தேர்தலில் எப்படி வாக்குக் கேட்பது? அதுவும், இந்த கட்சியின் பெயரில் எப்படி அவர்கள் தேர்தல் கேட்பது?

இதைத்தான் நான் அவர்களுக்கு சொல்கிறேன். அவர்கள் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்கும் நிலைமை எதிர்காலத்தில் வரப்போகின்றது. இதைச் சொல்லும்போது கல்முனையில் இருந்து சிலபேர் கைதட்டுகிறார்கள். போய் சொல்லுங்கள்.

இன்று எம்.பி. மார்கள் ஒரு பக்கம் தலைவர் மறு பக்கம். கட்சி எல்லாம் பாதிக்கப்பட்டு விட்டது

என்ற நோக்கத்தில் இங்கு நிலைமையைப் பார்க்க இலங்கையின் நாலாபுறத்திலிருந்தும் வந்திருக்கிறார்கள்.இவர்கள் அனைவரும் இந்த இயக்கம் ஆழமாக வாழ வேண்டும் என்ற உணர்வில் இருப்பவர்கள். இந்த உணர்வு இருக்கும் வரை இந்த இயக்கம் வாழும். இந்த உணர்வோடு இளைஞர்களும் கட்சிகளின் போராளிகளும் இருக்கும் வரை இந்தத் தலைமைக்கும் தயக்கம் கிடையாது. பயமில்லாமல் பீதியில்லாமல் எதையும் எதிர்கொள்ளலாம்.

எனவேதான், அந்த முடிவோடு மிகத் தெளிவாக இந்த இயக்கத்தை வாழ வைப்பதற்கு இன்று சம்மாந்துறையில் இளைஞர்கள் புறப்பட்டு உள்ளமைபோல் ஒவ்வோர் ஊரிலும் இளைஞர்கள் புறப்பட வேண்டும். ஒரு யுக மாற்றம் நிகழ வேண்டும். அதற்கான தருணம் வந்து விட்டது. இது ஒரு நிலைமாறு காலம். இந்த நிலைமாறு காலத்தில் இந்த இயக்கம் புடம்போடப்பட்டு வீரியத்துடன் இன்னும் வீறுநடை போட்டுப் பயணிக்க வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்பான் என்ற பிரார்த்தனையோடு விடைபெறுகிறேன். – என்றார்.

# பொறுப்புக்கூறலில் இருந்து தப்பிக்காத வகையில் இலங்கை விவகாரம் கையாளப்படல் வேண்டும்!

## ஐ.நா.வுக்கு காணாமற்போன உறவுகள் வலியுறுத்து

பொறுப்புக்கூறல் பொறிமுறையை உள்நாட்டில் உருவாக்குவதாக இலங்கை அரசு கூறி காலங்கடத்திவரும் நிலையில், காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகம் (ஓ.எம்.பீ) தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தொடர்ந்தும் நம்பிக்கை வைப்பது உண்மைகள் மறைக்கப்படுவதற்கே வழிவகுக்கும். குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வதற்கும் இது காரணமாகலாம். அதனால், இலங்கையின் கபட நோக்கங்களைப் புரிந்துகொண்டு, பொறுப்புக் கூறலிலிருந்து இலங்கை தப்பித்துக்கொள்ள முடியாத வகையில், உறுதியான அணுகுமுறை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கையாள வேண்டும்.

காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தை முன்னிலைப்படுத்தும் இலங்கை அரசின் கபட நாடகத்தை புரிந்துகொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவாக நீதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் சர்வதேச விசாரணை ஒன்றை இலக்காகக்கொண்ட நகர்வை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உடனடியாக முன்னெடுப்பது அவசியமாகும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் உறவினர்கள் அமைப்பின் பணிப்பாளர் திருமதி கருணாவதி பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அந்த அமைப்பால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகம் மக்களுடைய நம்பகத் தன்மையைப் பெறவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையிலும் இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே நாம் அனுப்பிய கடிதத்தில் இது தொடர்பாகக் குறிப்பிட்டிருந்தோம். மனித உரிமைகள் ஆணையாளரால் அது புரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றது. ஆனால், அந்த அலுவலகத்தில் சில ஆள்கள் மாற்றப்பட்டுள்ளனர். அதன்மூலமாக அந்த நம்பகத்தன்மை பாதிக்கப்பட்டிருக்கின்றது என ஆணையாளர் சொல்ல முற்படுகின்றார். ஏதோ ஒரு வகையில் அந்த அலுவலகத்தின் மீதான நம்பிக்கையை ஆணையாளர் முற்றாக இழந்துவிடவில்லை என்பதை அவரது இந்தக் கருத்து வெளிப்படுத்துகிறது.

இந்த அலுவலகம் தவறான பாதையில் சென்றுகொண்டிருந்தது என்பதை நாம் ஆரம்பத்திலிருந்தே தெரிவித்துவந்திருக்கின்றோம். மேற்கு நாடுகளும், மனித உரிமைகள் பேரவையும் காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகம் தொடர்பில் தொடர்ந்தும் நம்பிக்கை வைத்திருந்தது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு பாதிக்கப்பட்ட மக்கள் வழங்கிய எழுத்து மூலமான ஆவணங்கள், காணொலிப் பதிவுகள் என்பன இலங்கை அரசுக்கு கொடுக்கப்பட்டுள் ளன. காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகம் மீதான நம்பிக்கையில்தான் அவை வழங்கப்பட்டிருந்தன.

இருந்த போதிலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடைபெற்றது என்பதையோ அல்லது, அதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதையோ கண்டறிவதற்கு அந்த ஆவணங்களை காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகம் பயன்படுத்தவில்லை. பதிலாக, சம்பந்தப்பட்டவர்களைத் தொடர்புகொண்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அழுத்தம் கொடுப்பதற்கே அந்தப் பட்டியல் பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இதற்கான அழுத்தங்கள் அதிகளவுக்குக்கொடுக்கப்படுகின்றன என ஆதாரபூர்வமான தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்கள் என சுமார் 17 ஆயிரம் பதிவுகள் இருக்கும் நிலையில், 4 ஆயிரம் பதிவுகளுக்கு முன்னுரிமை கொடுப்பதாக காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகம் கூறியிருந்தது. இதனை மேலும் குறைப்பதை நோக்கமாகக்கொண்டே மரண சான்றிதழ் வழங்குவதாகவும், நஷ்ட ஈடு வழங்குவதாகவும் அரசு சொல்லிக்கொள்கின்றது. அழுத்தங்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் இதனை ஏற்றுக்கொண்டால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் குறைவடையும். இலங்கை அரசின் இலக்கும் அதுதான்.

கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு ஒரு லட்சம் ரூபாவை நஷ்ட ஈடாகக் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு லட்சம் ரூபாவையும், மரண சான்றிதழ்களையும் கொடுப்பதன் மூலமாக, இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டதாக சர்வதேச சமூகத்துக்குக் காட்டிக் கொள்வதற்கு அரசு திட்டமிடுகின்றது. இதன்மூலம் ஜெனீவாவிலும், சர்வதேசத்திலும் உருவாகும் அழுத்தங்களை நீர்த்துப் போகச் செய்துவிடலாம் என்பது அரசின் கணக்கு. மறுபுறம், அழுத்தங்கள் மூலமாக உறவுகளைப் பணியவைத்து மரண சான்றிதழ்களைக் கொடுப்பதன் மூலம் இந்தப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர முடியும் என அரசு திட்டமிடுகிறது.



அரசின் இந்தக் கபட நோக்கத் துக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை துணை நிற்பதாகவே நாம் கருதுகின்றோம். நம்பகத்தன்மையின் அடிப்படையில் ஐ.நாவுக்குக் கொடுக்கப்பட்ட சாட்சியங்களை இலங்கை அரசிடம் ஐ.நா. கையளித்தமை இதற்கு முதலாவது காரணம். பொறுப்புக் கூறல் பொறிமுறை தொடர்பில் உறுதியான தீர்மானங்கள் எதனையும் எடுக்காதமை இரண்டாது காரணம்.

எனவே, எதிர்காலத்தில் ஐ.நா.வுக்குப் பாதிக்கப்பட்ட மக்கள் கொடுக்கும் சாட்சியங்கள் – அதனை வழங்கியவர்களின் அனுமதியின்றி எந்தக் காரணத்தை முன்னிட்டும் இலங்கை அரசுக்கு கையளிக்கப்படாமலிருப்பதை ஐ.நா. உறுதிப்படுத்த வேண்டும். குற்றவாளிகளிடமே ஆதாரங்களைக் கையளிப்பது சாட்சியமளித்தவர்களின் உயிர்களுக்கே ஆபத்தானதாகலாம். அத்துடன், அவ்வாறானவர்கள் எதிர்காலத்தில் சாட்சியங்களையோ ஆதாரங்களையோ வழங்கத் தயங்குவார்கள் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காகவும், அதற்குப் பொறுப்புக் கூறப்படவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவுமே 13 வருட காலமாக உறவுகள் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். இந்தப் போராட்டத்தில் 320 இற்கும் அதிகமான உறவுகள் வயது மூப்பின் காரணமாகவும், நோய்களாலும் மரணமடைந்திருக்கின்றார்கள். மற்றவர்கள் உறுதியாகப் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். இந்தப் போராட்டத்தை நீர்த்துப்போகச் செய்யும் உபாயமாக இலங்கை அரசு முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஐ.நா. துணைபோகக்கூடாது என்பதை நாம் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

தற்போதைய அரசின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது மேற்கு நாடுகள் மற்றும் ஐ.நா. என்பவற்றின் நிகழ்ச்சி நிரலாக இருக்கலாம். அல்லது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது அவர்களுடைய திட்டமாக இருக்கலாம். ஆட்சி மாற்றத்துக்கான சூழல் இன்னும் உருவாகவில்லை என்பது கள யதார்த்தம். அதற்கான வாய்ப்பை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். இவ்வாறு காத்திருப்பது காலங்கடத்தப்படுவதற்கான வாய்ப்பை இலங்கை அரசுக்கு ஏற்படுத்திக்கொடுப்பதாக அமைந்துவிடும். அடுத்துவரும் மாதங்களில் மீண்டும் பின்னோக்கி வரமுடியாத ஒரு நிலைக்கு இலங்கை அரசு இந்தப் பிரச்சினையைக் கொண்டுபோய் நிறுத்திவிடும். ஐ.நாவின் தற்போதைய அணுகுமுறை இலங்கையின் இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்துவதாக அமையவில்லை. அதனால், ஐ.நாவும் மேற்கு நாடுகளும் இலங்கை தொடர்பான தமது அணுகுமுறையை உடனடியாக மறுபரிசீலனை செய்து மாற்றிக் கொள்ள வேண்டும்.

போலியான கருத்துக்களை மேற்கு நாடுகள் முன்வைக்கின்றன. சர்வதேச நீதிமன்றத்தை வைத்து போர்க் குற்றங்கள் தொடர்பான சில வழக்குகளைக் கையாளலாம் என அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால், இலங்கையில் போர்க் குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்கள் எங்குமே நிரந்தரமாக நிலைகொண்டிருக்கமாட்டார்கள். அதனால், சர்வதேச சட்டத்தைப் பயன்படுத்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது சிரமமானதாகவே இருக்கும்.

இவ்வாறு ஒரே ஒரு நடவடிக்கைதான் இவர்களால் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. அது – ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலையில் சம்பந்தப்பட்ட ஒருவரை கைது செய்தார்கள். தமிழ்த் தரப்பில் உள்ளவர்களைத்தான் இவர்களால் கைது செய்ய முடியும். உண்மையான போர்க் குற்றவாளிகளை இவர்களால் இலக்குவைக்க முடியாது. ஏனெனில் இலங்கை அரசு தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கான ஒரு சூழலில் தான் அப்போதிருந்து தந்திரோபாயமாகச் செயற்பட்டு வருகின்றது.

அதனால், ஐ.நா. தரப்பு சொல்கின்ற விடயங்கள் எவையும் எமக்கான தீர்வாக அமையப்போவதில்லை. ஆகவே, இன அழிப்பு நடைபெற்றுள்ளது என்ற கோணத்தில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை வெறுமனே போரின்போது இடம்பெற்ற ஒரு சம்பவமல்ல. இது திட்டமிடப்பட்ட ஓர் இன அழிப்பு. காணாமல் ஆக்கப்பட்டவர்களைப் பார்க்கும் போது 14 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவே அவர்கள் உள்ளனர். இவர்கள் ஆயுதச் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டவர்களாக இருந்திருப்பின் அவர்கள் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்திருக்க முடியும். ஆனால், அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டமை ஒரு சந்ததியை அப்படியே இல்லாமல் செய்வதற்கான திட்டமிடப்பட்ட செயற்பாடு எனக் கருதுவதற்கு காரணம் உள்ளது.

குறிப்பிட்ட வயதில் உள்ளவர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி அவர்களை நாட்டைவிட்டு வெளியேறச்செய்வதும் இலங்கை அரசின் உபாயமாக இருந்துள்ளது. இதன்மூலம் திட்டமிட்ட இனக்குறைப்பைச் செய்வதுதான் அரசின் நோக்கம்.

அதனால், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினையை உள்நாட்டுப்பொறிமுறை மூலமாகத் தீர்க்கலாம் என நினைப்பது ஆபத்தான ஒரு போக்காகும். இதனைப் புரிந்துகொண்டு இந்தப் பிரச்சினையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கான செயற்பாடுகளை மனித உரிமைகள் பேரவை முன்னெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் அட்டவணை – 2 இற்குள் தான் இருந்துவருகின்றது. அதாவது, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வருடாந்த அறிக்கையிடல் என்பதற்குள் வைத்துத்தான் இது கையாளப்படுகின்றது. இதற்குள் வரும்போது சம்பந்தப்பட்ட நாடுகளின் இணக்கத்துடன்தான் எதனையும் செய்ய முடியும். ஆனால், உலகில் இடம்பெறும் மோசமான மனித உரிமை மீறல் பிரச்சினைகள் அட்டவணை 4 என்ற நிகழ்ச்சி நிரலுக்குள் வைத்துத்தான் கையாளப்பட்டுள்ளன. இதன்மூலம் சம்பந்தப்பட்ட நாடுகளின் அனுமதி இல்லாமலேயே சில செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும்.

அதனால், மனித உரிமைகள் பேரவை இலங்கை விவகாரத்தை அட்டவணை 4 இல் வைத்து கையாள வேண்டும். அல்லது நிரந்தரமான ஒரு நிகழ்ச்சி நிரல் இலங்கைக்காக என உருவாக்கப்பட வேண்டும். இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மோசமான மனித உரிமை மீறல்களைத் தடுக்க முடியாததாக ஐ.நா. இருந்துள்ளது என்பதாலும், தொடர்ச்சியாக தீர்மானங்களைக் கொண்டுவந்தும் எதுவும் நடைபெறவில்லை என்பதாலும் நிரந்தரமான ஒரு நிகழ்ச்சி நிரலைக்கொண்டுவருவதுதான் இலங்கை விவகாரத்தைக் கொண்டுவருவதற்குப் பொருத்தமானதாக இருக்கும்.

இனப்படுகொலை நடைபெற்றதா என்பதைக் கண்டறிவதற்காக மியன்மாருக்கு நியமித்ததைப்போல உண்மைகளைக் கண்டறிவதற்கான குழு ஒன்றை அவர்கள் நியமிக்க வேண்டும். அல்லது விசாரணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும். இனப்படுகொலை நடைபெற்றதா என்பதைக் கண்டறிவதற்கான ஆணை அதற்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இலங்கையில் அரசியல் மாற்றம் ஒன்றைக்கொண்டுவருவதற்கான உபாயமாகத்தான் ஜெனீவா தீர்மானங்கள் அமைந்திருக்கின்றனவா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய சம்பவங்கள்தான் இடம்பெற்றுவருகின்றன. ஆட்சி மாறிய பின்னர் அந்த அழுத்தங்களைத் தளர்த்திக்கொள்வது வழமையாகவுள்ளது. அதனால், மனித உரிமைகள் பேரவையின் பிடியிலிருந்து இலங்கை தப்பித்துக்கொள்ள முடியாத வகையில், அட்டவணை 4 இற்குள் இலங்கை விவகாரத்தைக் கொண்டுவர வேண்டும். அல்லது இலங்கை தொடர்பாகத் தனியான ஒரு நிகழ்ச்சி நிரல் உருவாக்கப்பட வேண்டும்.

இதன்மூலமாக மட்டுமே மனித உரிமைகள் பேரவை மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பதுடன், பாதிக்கப்பட்ட தரப்பாகவுள்ள ஈழத் தமிழர்களுக்கு நீதியையும் பெற்றுத்தரக்கூடியதாக இருக்கும் என்பதை வலியுறுத்துகின்றோம். – என்றுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# தேசிய பாதுகாப்பென நீங்கள் கருதுவது சிங்கள இனத்தின் பாதுகாப்பை மட்டுமா?

## கஜேந்திரகுமார் எம்.பி காட்டத்துடன் கேள்விக் கணை

தேசிய பாதுகாப்பு என நீங்கள் கருதுவது சிங்கள இனத்தின் பாதுகாப்பை மட்டுமா எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத திருத்தச் சட்டம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

தேசிய பாதுகாப்பு என நீங்கள் கருதுவது, சிங்கள இனத்தின் பாதுகாப்பை மட்டுமா? இங்கு நாடு என நீங்கள் கருதுவது, ஓர் இனத்தை மட்டும் தான் குறிக்கிறதா? அல்லது இந்த நாட்டின் அனைத்து குடிமக்களையும் குறிக்கின்றதா?

அனைத்து இன குடிமக்களையும் உள்ளீர்த்து அவர்களுக்குமான பாதுகாப்பு எனக் கருதினால், அது ஒரு போதும் பெரும்பான்மைவாத கருத்தியலில் இருந்து உருவாக முடியாது. உதாரணத்துக்கு இந்த அவையில் பெரும்பான்மையானவர்கள் ஒன்றைக் கேட்கிறார்கள் என்பதற்காக அது முழு நாட்டுக்கும் உரித்தானது எனக் கருதவே முடியாது.

துரதிஷ்டவசமாக இங்கு இருக்கின்ற எதிர்க்கட்சியினரும் அதே எண்ணப்பாங்கிலேயே கருத்துரைத்திருக்கிறார்கள். இங்கு இந்த நாடு எனக் கூறும் போது, இங்கு பல்லின அடையாளங்களை வெளிப்படுத்துபவர்கள் இருக்கிறார்கள் என்பதை ஏற்பதில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரை இந்த நாடு ஆகக்குறைந்தது இரு தேசங்களைக் கொண்ட பல்தேச நாடாகும். எனவே, ஒரு நாட்டின் கருத்து என வரும்போது, ஒவ்வொரு இனத்தினதும் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இந்த நாட்டில் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடந்தது என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அந்தப் போராட்டம் ஏன் நடந்தது எனப் பாருங்கள். இந்த அரசு, தொடர்ச்சியாக இரு இனக் குழு மத்தை மட்டும் கருத்தில் கொண்டு மற்றைய சமூகத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து ஒதுக்கி, ஒடுக்கியதாலேயே இங்கு போராட்டம் உருவானது.

இந்த நாட்டை நாம் எப்படி உருவாக்கிப் பார்க்க விரும்புகிறோம் என்பதை வடக்கு கிழக்கின் மக்கள், ஜனநாயக ஆணையாகத் தொடர்ச்சியாகவும் மிகத் தெளிவாகவும் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். அவை ஆயுதத்துக்கோ, பிரிவினைக்கோ ஆன கோரிக்கைகளாக இருக்கவில்லை. மாறாக, பிரிவினைக்கும் ஆயுதத்துக்கும் எதிரான ஆணைகளாகவே முன்பு இருந்திருந்தன.

இந்த அவைக்கு வந்திருந்த தமிழ் பிரதிநிதிகள், வன்முறையையும், பிரிவினையையும் நிராகரித்தே குரல் கொடுத்திருந்தார்கள். அவர்கள் கேட்டதெல்லாம், "எமது விருப்புகளையும் செவிமடுங்கள். எம்மையும் இந்த நாட்டின் சம பிரஜைகளாக மதித்து, எம்மையும் உள்வாங்குங்கள்" என்பதே ஆகும். ஆனால், அங்கு தான் நீங்கள் தவறிழைத்தீர்கள். அன்று மட்டும் அல்ல, இன்று வரைக்கும் அதே தவறையே தொடர்ந்தும் இழைத்துக்கொண்டு இருக்கிறீர்கள்.

இந்த நாடு பல தேசங்கள் உடைய நாடென்றும் இங்கு எமக்கு சமஷ்டி முறையான ஆட்சியே தேவை எனவும் மிகத் தெளிவானதும் மிக உறுதியானதுமான ஜனநாயக ஆணையை மீளவும் மீளவும் எமது மக்கள் அளித்துவருகின்றனர்.

உண்மையில் இந்த அரசாங்கங்கள் மக்களிடம்



பெற்ற ஆணையை விட எமது மக்கள் அளித்த ஆணை ஜன்நாயக ரீதியில் வலுவானது. அதை மீளவும் மீளவும் நீங்கள் கருத்திலெடுக்காது நிராகரிக்கின்ற போது, எமது பிரதிநிதிகள் இங்கு வந்து அந்த ஆணையை பற்றி பேசிவது முட்டுச்சுவரில் தலையை மோதுவதாகவே இருக்கின்ற போது எம்மை ஒதுக்கி நடப்பதையே தொடர்ந்தும், உங்கள் செல்நெறியாகக் கொண்டிருக்கின்ற போது எமது மக்கள் வேறு என்ன செய்ய முடியும்?

எமது தாய் நிலத்தில் இருக்கும் மக்கள் தொடர்ச்சியாக உரிமை மறுக்கப்படுகின்ற போது – அவர்களது தாய் நிலம் அவர்களிடம் இருந்து பறிக்கப்படுகின்ற போது –அவர்களது சமயவழிபாட்டிடங்கள் அபகரிக்கப்படுகின்ற போது – காலம் காலமாக உழுது பயிரிட்ட நிலத்தில் இருந்து போரால் வெளியேறி இப்போது மீள வரும்போது – அவை காட்டு நிலமெனவும் அதில் பயிரிடமுடியாதெனவும் மறுதலித்து, அதே நேரம் வேறு பிரதேசத்தில் இருந்து வருகின்ற ஏனைய இனத்தவருக்கு நிலத்தில் வளர்ந்திருக்கும் மரங்களை வெட்டி உழுது பயிரிட அனுமதிக்கும் போது – அந்த மக்கள் வேறு என்ன தான் செய்ய முடியும்?, ஆனால் இது தான் இன்றும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

# யாழ். கொவிட் சிகிச்சை நிலையங்களில் பல லட்சம் ரூபா பொருள்கள் மாயமாம்!

## மாகாண கணக்காய்வு அறிக்கையில் அம்பலம்

யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்ட மூன்று கொரோனா இடைத்தங்கல் முகாம்களில் இருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கணக்கு அறிக்கையில் இடம்பெறாமல் மாயமாகியுள்ளன.

யாழ். மாவட்டத்தில் கொரோனாப் பரவல் அதிகரித்த காலப்பகுதியில் தனிமைப்படுத்தி சிகிச்சை வழங்குவதற்கும் பிற மாவட்டங்களிலிருந்து கொரோனா என இனங்காணப்பட்டவர்களை தனிமைப் படுத்துவதற்காக மருதங்கேணி, நாவற்குழி மற்றும் வட்டுக்கோட்டை தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்பட்டன.

வடமாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் கண்காணிப்பில் இந்த கொரோனா இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்கள் செயற்படுத்தப்பட்டன.

இவ்வாறான நிலையில் மருதங்கேணி தனிமைப் படுத்தல் நிலையத்துக்கு தொலைக்காட்சிகள், குளிர் சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரம் எனப் பல பொருள்கள் பல மில்லியன் ரூபா செலவில் வழங்கப்பட்டன. இந்நிலையில் யாழில் கொவிட் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்த நிலையில் இடைத்தங்கல் நிலையங்கள் அகற்றப்பட்டன.

அந்த இடைத்தங்கல் நிலையங்கள் அமைக்கப்பட்ட போது வழங்கப்பட்ட பல மில்லியன் ரூபா பொருள்கள் அதனை அப்புறப்படுத்திய போது கணக்குப் புத்தகத்தில் வரவிடப்படாமல் மாயமாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் சர்ச்சைகள் தோற்றுவிக்கப்பட்ட நிலையில் மாகாண கணக்காய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் மருதங்கேணி வைத்தியசாலை தொடர்பில் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன் போது மேற்படி சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டபோது சுகாதார அமைச்சு மற்றும் இராணுவத்தால் வழங்கப்பட்ட பல மில்லியன் ரூபா பொருள்கள் மாயமாகியிருந்தமை கணக்காய்வு அறிக்கையில் அம்பலமாகியுள்ளதாக அறியக் கிடைத்தது.

இந்த விடயம் தொடர்பில் கடந்த 24 ஆம் திகதி யாழ்.பிராந்திய சுகாதார பணிமனையின் கணக்காளர் பிரிவுக்கு வழங்கப்பட்ட தகவல் அறியும் சட்ட மூலத்துக்கு இதுவரை பதில் வழங்காமல் இழுத்தடிப்பு செய்து வருகிறது.

ஆகவே, வடக்கு மாகாண சுகாதார சேவை பணிமனையில் பல ஊழல் மோசடிகள் தொடர்பில் குற்றச்சாட்டுகள் எழுந்த வண்ணம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் விநியோகத்தை துரிதப்படுத்த கோரும் நாமல்!



மக்களை எரிபொருள் வரிசையில் காக்க வைப்பதற்கு இடமளிக்காமல், தேவையான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விநியோக நிறுவனங்களும் தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எரிபொருள் விநியோகத்தை துரிதப்படுத்துவதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் தொடர்பில் ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார் எனவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

# சிறந்த சேவையை வழங்குபவர்களாக கிராம அலுவலர்கள் செயற்படவேண்டும்!

## கிளி. மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் 'அட்வைஸ்'

மக்களுக்கும் கிராம அலுவலர்களுக்குமான புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளவும் மக்களிடையே நல்லுறவை பேணி சிறந்த சேவையை வழங்குபவர்களாக கிராம அலுவலர்கள் செயற்பட வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முகாமைத்துவப் போட்டியில் வெற்றி பெற்ற கிராம அலுவலர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

'அதாவது' மக்களுக்கும் கிராம அலுவலர்களுக்குமான புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளவும் மக்களிடையே நல்லுறவைப் பேணி அவர்களுக்கான சிறந்த சேவையை வழங்குவதோடு ஒரு நல்ல அபிப்பிராயத்தையும் தோற்றுவிப்பதாக கிராம அலுவலர்கள் செயற்பட வேண்டும்.

கிராம அலுவலர்கள், அதிகாரிகள் மக்களுடனான நல்லுறவை பேணிக்கொள்வது மிக அவசியமாகும். கிராம அலுவலர் அலுவலகங்களானவை மக்களுக்கான சிறந்த சேவையை வழங்கும் மையங்களாக அமைய வேண்டும்.

அதாவது பொது நிர்வாக சேவைகளை மக்களுக்கு கொண்டு செல்லும் ஊடகமாக கிராம அலுலர்களே உள்




ளனர். அரசின் எந்தக் கொள்கையாக இருந்தாலும் சரி அதை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் கிராம அலுவலர்கள் பொறுப்பு வாய்ந்தவர்களாக காணப்படுகின்றனர். – என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

## தமிழர் பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தர்மலிங்கம் சித்தார்த்தன்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டின் நிலைமையைப் பற்றி ஆழமான பொருளாதாரப் பகுப்பாய்வைச் செய்தால், நாட்டின் தற்போதைய பொருளாதார அவலத்துக்குக் கொரோனாப் பெருந்தொற்று மாத்திரம் காரணம் அல்ல என்பதை நீங்கள் தெளிவாகக் காணலாம்.

பல தசாப்தங்களாக நாட்டில் நிலவும் இன நெருக்கடியை, அடுத்தடுத்து வந்த அரசுகளின் கொள்கை, அணுகுமுறை மற்றும் தவறான நிர்வாகக் கையாளுகையே தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு உண்மையான காரணமாகும்.

சுயாட்சி அதிகாரத்துக்கான தமிழ் மக்களின் அபிலாகைக் கோரிக்கைக்கு முன்னதாகவே எமது நாட்டின் அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சிறந்த அரசியல் தீர்வை அடைந்திருக்க முடியும்.

எவ்வாறாயினும், சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் சித்தாந்தத்தால் உந்தப்பட்ட அரசுகள் அரசியல் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வையே தேர்ந்தெடுத்தன. உண்மையில், அதுவே இன்றைய பேரழிவுகரமான கடன் நெருக்கடிக்குள் நம் நாட்டைத் தள்ளிவிட்டுள்ளது.

நீங்கள் வரலாற்றை ஆழமாக ஆராய்ந்தால், பல தசாப்தங்களாக சிங்கள பௌத்த பெரும்பான்மை சித்தாந்தத்துடன் நடத்தப்பட்ட யுத்தமானது இன்று எமது நாட்டின் அனைத்து சமூக மக்களினதும் தோள்களில் ஒட்டுமொத்த பொருளாதாரச் சுமையையும் சுமத்தியுள்ளது.

2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளைத் தோற்கடித்த பின்னரும்கூட, தமிழ் மக்களின் மனதை வெல்வதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து வந்த எமது நாட்டு அரசுகள் மேற்கொள்ளவில்லை. மாறாக நீங்கள் பாதுகாப்புச் செயலாளராக செயற்பட்ட அப்போதைய அரசு, தமிழ் மக்களைப் போரில் வெற்றிகொண்டுவிட்டோம் என்கின்ற மனப்பான்மையுடன் தொடர்ந்தும் எமது நாட்டை ஆட்சி செய்து தமிழ் மக்களை அந்நியப்படுத்தியது. அதுவே, அந்நேரத்தில் பெரும் ஆற்றலையும் விருப்பத்தையும் கொண்டிருந்த புலம்பெயர்ந்த தமிழர்கள் நம் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பங்களிப்பதைத் தடுத்திருத்தது.

2009இல் போரை முடிவுக்குக்கொண்டு வந்த அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் எவ்வளவோ விடயங்களைச் செய்திருக்கலாம். 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் சென்று தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையிலான அரசியல் தீர்வொன்றை நாட்டில் உள்ள அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் காணப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் உட்பட பல்வேறு சர்வதேச தலைவர்களுக்கும் உறுதியளித்திருந்தார். அவர் அதனைச்செய்திருந்தால், புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடமிருந்து இன்னும் அதிகமான முதலீட்டாளர்களை ஈர்த்திருப்பார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் மிக சக்திவாய்ந்த மனிதராக இருந்தபோது, அரசியல் தீர்வுக்கான சாத்தியமான யோசனையாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் முன்மொழியப்பட்ட பிராந்தியங்களின் ஒன்றியம் என்கின்ற ஓர் அரசியல் தீர்வு இருந்தது. அதனை இந்த நாட்டு மக்களின் பேராதரவைப் பெற்றிருந்த மஹிந்த ராஜபக்ஷ இலகுவாக அமுல்படுத்தியிருக்கலாம்.

அவர் வாக்குறுதியளித்தபடி 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு காண விரும்பாவிட்டாலும், குறைந்தபட்சம் 13ஆவது திருத்த வரைபை, அதன் ஆரம்ப அசல் வடிவிலேயே முழுமையாக நடைமுறைப்படுத்தியிருக்க முடியும். ஆனால், அதற்கான துணிவு அவருக்கு இருக்கவில்லை. நாட்டில் முதலீடு செய்வதற்குப் பெரும் ஆற்றலுடன் இருந்த புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழ் மக்களுக்கு உரிய இடத்தை வழங்க அரசு முன்வராததால் விலகி நிற்க முனைந்தனர்.

இதற்கிடையில், எமது நாட்டில் முதலீடு செய்ய ஆர்வத்துடன் வந்த புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் கடுமையான விதிமுறைகளைக் கடந்து அரசின் சிங்கள அதிகாரிகளிடம் அனுமதி பெறுவது மிகவும் கடினமாக இருந்தது. அரசின் நடவடிக்கைகளால் மேம்படுத்தப்பட்ட இந்த அதிகாரிகளின் சிங்கள பௌத்த பெரும்பான்மை மனோநிலை, அந்த முதலீட்டாளர்களின் பெரும் உற்சாகத்தை பாரிய அளவில் சிதைத்துவிட்டது. முதலீட்டாளர்கள் மீது சுமத்தப்பட்ட தாங்க முடியாத மற்றும் சட்டத்துக்குப் புறம்பான சுமைகள் அவர்கள் தங்கள் பணத்தை எடுத்துக்கொண்டு அவர்கள் வசிக்கும் நாடுகளுக்குத் திரும்பிச் செல்ல வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்தியது என்பதை நான் உங்களுக்குக் கூறமுடியும்.

சில முதலீட்டாளர்கள் நாட்டின் தென் பகுதியிலேயே முதலீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். தனிப்பட்ட முறையில், இதுபோன்ற சில சம்பவங்களை நான் அறிவேன். மேலும் இதுபோன்ற பல சம்பவங்கள்பற்றி எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் தமிழ் மக்களின் சுயநிர்ணய ஆட்சிமுறை என்கின்ற நீண்ட கால அபிலாஷையைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒருநிரந்தர தீர்வைஎட்டும்வரை, ஒரே நாட்டுக்குள் அரசியல் தீர்வு காண்பதற்கான பரிந்துரையாக குறைந்தபட்சம் ஏற்கனவே அரசமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தத்தை அதன் ஆரம்ப வடிவிலேயே, முழுவதுமாக செயற்படுத்துமாறு எமது கட்சியின் சார்பில் பரிந்துரைக்க விரும்புகின்றேன். இத்தகைய நடவடிக்கை ஒன்று மாத்திரமே தற்போதைய பொருளாதார அவலநிலையில் இருந்து நமது நாட்டை மீட்பதற்கான ஒரே வழியென நான் திடமாக நம்புகின்றேன்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இணக்கமான அரசியல் தீர்வைக் கண்டறிவது நிச்சயமாக எமது நாட்டை ஆசியாவின் சொர்க்கமாக மாற்றும் என்பதையும் நான் தங்களின் கவனத்துக்குக் கொண்டுவர விளைகின்றேன் – என்றார்.

---

## பட்டினியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பொருளாதார நெருக்கடியால், மக்கள் பட்டினியில் வாடும் நிலை உருவாகியுள்ளது. வடக்கில் இருந்து ஒரே நாளில் 16 பேர் தமிழகம் சென்றுள்ளனர். இந்நிலைமை தொடரக்கூடாது.

தற்போதைய நிலைமையில் இருந்து மீள்வதற்கான பொறிமுறை அவசியம். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் – என்றார்.

---

## மலையத் தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
மனோ கணேசன் தலைமையில் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் கையளித்தது.

கொழும்பு இந்திய இல்லத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் வே. இராதாகிருஷ்ணன், உதயகுமார் எம்பி, கே.டி. குருசாமி, பேராசிரியர் சோ.சந்திரசேகரம் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இந்தியத் தரப்பில் தூதுவர் கோபால் பாக்லே, துணைத் தூதர் வினோத் கே. ஜேகப், அரசியல் துறை செயலாளர் பானு பிரகாஷ் ஆகியோர் பங்கேற்றனர்.

# 350 கிலோ கொக்கேயின் கொழும்பில் சிக்கியது!





கொழும்பு, மார்ச் 24

பனாமா நாட்டில் இருந்து இந்தியாவிற்குக் கடந்த முயன்ற 350 கிலோ கொக்கேயின் இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பனாமாவில் இருந்து இலங்கை வழியாக இந்தியாவிற்கு அனுப்ப முயன்ற கெண்டெய்னரில் இருந்தே நேற்றைய தினம் இந்தப் பெருந்தொகை கொக்கேயின் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் இலங்க்க சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

---

## புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

நேற்று முற்பகல் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட விடயங்கள், அதன் முன்னேற்றம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கலந்துரையாடல் தொடர்பிலும் ஜனாதிபதி, திருமதி நூலண்ட்டிடம் தெரிவித்தார்.

அது பற்றி தனது பாராட்டைத் தெரிவித்த உதவிச் செயலாளர், கனடா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாடுவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார்.

புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்த தான் ஆர்வமாக உள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியில் முதலீடு செய்யுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் பசுமைத் தொழிநுட்பத்தை இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்தவும், சைபர் மற்றும் தகவல் தொழிநுட்பத் துறைகளின் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திருமதி நூலண்ட் தெரிவித்தார்.

இந்நாட்டின் கல்வி வசதிகள் தொடர்பில் அவதானம் செலுத்திய உதவிச் செயலாளர், தனியார் துறையினரின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதன் மூலம், உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்த முடியும் எனச் சுட்டிக்காட்டினார்.

கொரோனாத் தொற்றுநோய் மற்றும் ஏனைய நாடுகளில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளால், இந்நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்தைத் தணிப்பதற்காக, சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்ல தீர்மானித்ததாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்தத் தீர்மானம் தொடர்பாகவும், அதேபோன்று உண்மையைக் கண்டறியும் பொறிமுறைக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் திருத்தத்துக்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் திருமதி நூலண்ட் பாராட்டினார்.

உதவிச் செயலாளர் டொன் லூ, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சன்ங், தலைமை பிரதி உதவிப் பாதுகாப்புச் செயலாளர் அமண்டா டோரி, அரசியல் அதிகாரி ஜெஃப் செனின், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர் – என்றுள்ளது.

---

## ஈழ அகதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இவ்வாறு தப்பிச் சென்றவர்களில் மன்னாரைச் 6 பேர் நேற்றுக் காலை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது புழல் சிறையில் அடைக்க உத்தரவிடப்பட்டது.

இந்தநிலையில், நேற்று மாலை தமிழ் நாடு அரசின் சிபார்சுக்கமைய ஈழத்தில் இருந்து வருபவர்களை நீதிமன்றில் நிறுத்தாது நேரடியாக மண்டபம் அகதி முகாமுக்குக் கொண்டு சென்று தங்க வைக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது.

இதற்கமைய வவுனியாவைச் சேர்ந்த 10 பேரும் நேற்று மாலை மண்டபம் அகதி முகாமில் ஒப்படைக்கப்பட்டனர்.

---

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்

மஜனாதிபதி மாளிகையில், சர்வகட்சி மாநாட்டை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கான முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகளை எதிர்பார்த்து இந்த மாநாடு கூட்டப்பட்டது. கட்சித் தலைவர்களும் பிரதிநிதிகளும் எழுத்து மூலமாகவும், வாய்மொழியாகவும் தங்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தனர்.

நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் தங்களின் அதிகபட்ச பங்களிப்பையும் அர்ப்பணிப்பையும் சர்வகட்சி மாநாட்டுக்கு எதிர்காலத்தில் வழங்குவதாகவும் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், தற்போதைய பொருளாதார நிலைமையை மாநாட்டில் முன்வைத்தார்.

சர்வகட்சி மாநாடு நேர்மையான ஒரு முயற்சி ஆகும். இதில் எந்தவித அரசியல் இலாபமோ குறுகிய நோக்கமோ கிடையாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அரசின் அழைப்பை ஏற்றதுடன், அதனைத் தேசிய தேவையாகக் கருதி பங்கேற்ற அனைத்து கட்சிகளுக்கும் ஜனாதிபதி தனது நன்றியைத் தெரிவித்தார். கலந்துகொள்ளாத ஏனைய கட்சிகளுக்கும் வருகை தந்து, தமது நிலைப்பாட்டை சர்வகட்சி மாநாட்டின் முன்னிலையில் தெரிவிக்குமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துக் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை மீளாய்வுசெய்வதற்கு பொறிமுறை ஒன்றை உருவாக்கி பயனுள்ள முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்காக குழுவொன்றை அமைக்க முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# ஆர்ப்பாட்டக்காரர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு எந்தத் தடைகளையும் அரசு மேற்கொள்ளவில்லை

## அமைச்சர் ரமேஷ் பத்திரன பெருமிதம்

கடந்த இரண்டரை வருடங்களாக நாட்டில் இடம்பெற்ற எந்தவொரு ஆர்ப்பாட்டங்களின்போதும், ஆர்ப்பட்டக்காரர்களைத் தடுக்கும் வகையில் எந்தவித தடைகளையும், தாக்குதல்களையும் சமகால அரசு மேற்கொள்ளவில்லை என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், பெருந்தோட்டத்துறை அமைச்சருமான அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அரசு தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது நாட்டின் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்கான முழுமையான சுதந்திரத்தை ஜனாதிபதி மக்களுக்கு வழங்கியுள்ளார். அவற்றுக்கு நாம் ஒருபோதும் இடையூறுகளை ஏற்படுத்தவில்லை. ஜனநாயக நாடு என்ற ரீதியில் நாம் மக்களுக்கு சுதந்திரத்தை வழங்கியுள்ளோம். அதே நேரம், சில அரச நிறுவனங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பாதுகாப்புப் பிரிவுக்கு காணப்படுகின்றது. அவர்கள் அதன்படியே செயற்படுகின்றனர். அவர்கள் ஒருபோதும் சட்டத்தை தவறாகப் பயன்படுத்துவதில்லை. அது தொடர்பாகத் தெளிவான ஆலோசனைகளை ஜனாதிபதி அவர்களுக்கு வழங்கியுள்ளார். இந்த ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் சில குழுக்கள் பிரச்சினைகளை ஏற்படுத்தி, அதனூடாகத் தனி நபர்களுக்கு அல்லது குழுக்களுக்கு இடையில் குழப்பங்களை ஏற்படுத்தி அரசியல் இலாபத்தைத் தேடுவதே அவர்களின் தேவையாக உள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.



## பிரதமர் மட்டுவில் பொருளாதார மையத்துக்கு வரும்போது:

# காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிவேண்டி போராடிய தவிசாளர் உள்ளிட்டோர் விசாரணைக்கு அழைப்பு!

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத்தைத் திறந்து வைத்த நிலையில், அங்கு காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார்களுடன் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் செல்வரட்ணம் மயூரன் ஆகியோர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தமக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்றின் அடிப்படையில் இன்று (வியாழக்கிழமை) காலை 9 மணிக்கு நுணாவிலில் உள்ள சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைகளுக்காக சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் யாழ். விஜயத்தின் போது காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக மட்டுவில் பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

அவ்வாறாக வருகை தந்த தாய்மாரை பொலிஸாரும் இராணுவத்தினரும் கடுமையாகத் தாக்குவதை அறிந்து அப் பகுதிக்குச் சென்ற வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ் உள்ளிட்டவர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினருடன் இணைந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரியும் தாய்மார் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் பொருளாதார மத்திய நிலைய வளாகம் உள்ளிட்ட பகுதிகளில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் அங்கு பதாதைகள் எரிக்கப்பட்ட விடயம் தொடர்பில் பொலிஸாரால் வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ் உள்ளிட்டவர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

# வான் பரப்பும் நாட்டில் விற்பனை ஹரின் பரபரப்புக் குற்றச்சாட்டு!

பாதுகாப்பு கட்டமைப்பு என்ற போர்வையில் இலங்கையின் வான் பரப்பையும் இந்தியாவுக்கு விற்பனை செய்வதற்கு அரசு முயற்சிப்பதாகவும், இது தொடர்பான அமைச்சரவை பத்திரமும் முன்வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பதுளையில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

'2 கோடியே 90 லட்சம் டொலர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்காக அரசு இலங்கையின் வான் பரப்பை இந்தியாவிற்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பதவிக்கு வந்த ஜனாதிபதி நாட்டின் பாதுகாப்பை மாத்திரமல்லாது கடற்படையையும் இந்தியாவுக்கு விற்பனை செய்துள்ளார்.

இலங்கை மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வரும் சந்தர்ப்பம். எரிவாயுவை கொள்வனவு செய்ய முடியாது மக்கள் வீதிகளுக்குக் குறுக்காக அமர்ந்து போராட்டங்களை நடத்தி வரும் வேளையில், இலங்கையில் பாதுகாப்புக் கட்டமைப்புக்கு எனக் கூறி, இலங்கையின் வான் பரப்பு இந்தியாவுக்கு விற்பனை செய்யப்பட்டுவிட்டது.

இலங்கையின் கடல், நிலமும் சீனாவுக்கு வழங்கப்பட்டது. துறைமுகங்களை இந்தியாவுக்கு வழங்கினர்.

எல்.என்.ஜி திட்டத்தை அமெரிக்காவுக்கு வழங்கினர். இவ்வாறான நிலைமையில் இலங்கையின் வான் பரப்பும் 2 கோடியே 90 லட்சம் டொலர்களுக்கு இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பு ட்ரோன் விமானங்களைப் பறக்கவிடுவதற்காக இலங்கை வான் பரப்பு விற்பனை செய்யப்பட்டுள்ள முதல் சந்தர்ப்பமாக இதனை நான் பார்க்கின்றேன். இந்தியாவுடன் மூன்று உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.



இதில் ஒன்று இலங்கை மக்களின் உயிரியல் அடையாளங்களை அதாவது கைவிரல் அடையாளங்களை இந்தியாவுக்குக் கொண்டு செல்லும் உரிமையை வழங்கியுள்ளனர். இது சம்பந்தமாக இந்திய நிறுவனம் ஒன்றுடன் இணைந்து உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்திய அரசுடன் இது தொடர்பான உடன் படிக்கையில் கைச்சாத்திட இலங்கை தொழில்நுட்ப அமைச்சுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மூன்று ட்ரோன்கள் மற்றும் நான்காயிரம் தொன் எடை கொண்ட மிதக்கும் மிதவை படகு ஆகியவற்றை இலங்கையில் பயன்படுத்த இந்திய நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை சம்பந்தமான முழு பாதுகாப்பு இந்தியாவிற்கு விற்கப்பட்டுள்ளது. இது மிகவும் பயங்கரமானது. நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வந்த வீரர் இலங்கை கடற் பாதுகாப்பையும் இந்தியாவுக்கு விற்பனை செய்துள்ளார்.

இந்திய கடற் கண்காணிப்பு அமைப்புக்கு அம்பாந்தோட்டையில் ஒரு மையத்தை ஆரம்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும்.

சீனாவுக்கு துறைமுகம், இந்தியாவுக்கு கடல், மிகப் பெரிய போரை ஏற்படுத்தக் கூடியது. – எனத் தெரிவித்துள்ளார்.

# வைத்தியர் சாபியின் சம்பள நிலுவையை வழங்க முடிவு

குருணாகல் வைத்தியசாலையின் வைத்தியர் சாபி சிஹாப்தீனின் சம்பள நிலுவை மற்றும் இதர கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டமா அதிபர் இந்த விடயத்தை நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளார். அவருக்கு கட்டாய விடுமுறை வழங்கி வேலை நிறுத்தம் செய்யப்பட்ட காலத்திற்கான கொடுப்பனவுகளே இவ்வாறு செலுத்தப்படவுள்ளன.

# வானொலி தகராறினால் ஒருவர் வெட்டி கொலை!

அடைமானம் வைக்கப்பட்ட வானொலியை மீட்க வந்த போது ஏற்பட்ட தகராறு காரணமாக நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை கிராண்ட்பாஸ், வெஹரகொடெல்ல சந்திக்கு அருகில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் இறந்தவருக்கு வானொலியை அடகு வைத்துள்ளார்.

அடைமானம் வைக்கப்பட்ட வானொலியை மீட்க வந்தபோது ஏற்பட்ட தகராறு காரணமாக கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர் வெல்லம்பிட்டிய வெஹரகொடெல்ல பிரதேசத்தில் வசிக்கும் 51 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சந்தேக நபரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 22 வயது யுவதி கொடூரமாகக் கொலை; பொலிஸாரின் வலையில் சிக்கிய காதலன்!

கொழும்பு – களனி ஆற்றில் 22 வயதுடைய யுவதியொருவரை கொலை செய்துவிட்டு ஆற்றில் சடலத்தை வீசிய சந்தேகநபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி சந்தேகநபர் உயிரிழந்த பெண்ணின் காதலன் எனவும், அவர் தனது காதலியை கம்பஹா, தொரணகொடவில் உள்ள தனது வீட்டுக்கு யாரும் இல்லாத சமயம் அழைத்துச் சென்று கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார் எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன்போது , வெல்லம்பிட்டிய சேதவத்தையில் பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய யுவதியே இவ்வாறு கடந்த 16ஆம் திகதி கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி காணாமல்போயுள்ளார் என யுவதியின் பெற்றோர் வெல்லம்பிட்டிய பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதுடன், இதன்போது சந்தேகநபரும் தனது காதலியின் பெற்றோருடன் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச் சென்றுள்ளார்.

இதன்போது சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், கொஹிலவத்தை பிரதேசத்தில் வைத்து யுவதியின் சடலம் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக யுவதியின் சடலம் பொலிஸ் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் கிராண்ட்பாஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வெல்லம்பிட்டிய மற்றும் பெமுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.03.2022இல் வெளியிடப்பெற்றது.